கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௩.] குரோதன௵ புரட்டாசி௴ [பகுதி ௧௧.
Vol. XXIII. September-October-1925. No. 11.

கௌடில்யரது அர்த்தசாஸ்திரம்.

(௨௩௫-ஆம் பக்கத் தொடர்ச்சி).

பிரகரணம் ௪—அமைச்சரைத்தேரிதல்.

அத்தியாயம்—௮.

உடன்பயின்றோரை அமைச்சராகத்தெளிக; அவரது தூய்மையும் வினைத்திட்பமும் உடன்பயிலும்பொழுதே அறியப்படுகின்றமையால், என்பர் *பாரத்துவாசன் என்ற ஆசிரியர். ஏனென்றால் அவர் அரசன் நம்பிக்கைக் குரியர்.

அவ்விதமன்றென்பர் †விசாலாக்ஷன் என்ற ஆசிரியர். சிறுபிராயத்திலே தம்முடன் விளையாடியதுபற்றி அவர் அரசனை அவமதிப்பர்: ஆதலால் அரசனது இரகசியக்குற்றங்களில் உடம்பாடு உடையரை அமைச்சராகத்தெளிக; அவர் அரசனோடு ஒத்த சீலமும் ‡விதனமும் உடையராயிருத்தலால் தமது இரகசியங்கள் அறிந்தோன் அரசன் என்ற அச்சத்தால் அவர் அரசனைப் பிழையார்.

இஃது இருவரிடமும் உள்ள குற்றமேயென்பர் பராசரர். தனது இரகசியங்கள் அறிந்தோர் அமைச்சர் என்ற அச்சத்தால் அரசன் அவருடைய தீநெறிக்கிணங்கி யொழுகுவான்.

---

*பாரத்துவாசன் - துரோணாசாரியன். †விசாலாக்ஷன் - மகேசுவரன்.
‡கள் சூதுபோன்ற குற்றங்களில் அளவற்ற பற்றை விதனமென்பர் வடநூலார்.

யார்யாரிடத்தில் அரசன் தன் மறையை வெளியிடுகின்றானோ அச் செயலால் அவன அவ்வனைவாககும் கீழ்படிந்து வசியனாகிறான்.

ஆதலால் எவர் தன்னைப் பிராணஹானிக்குரிய கேடுகளினின்றும் காப்பாற்றுகின்றனரோ அவரை அமைச்சராகத் தெளிக; அவரது அன்புடைமை அறியப்படுகின்றமையால்.

அங்ஙனமன்றென்பர் *பிசுனன என்னும் ஆசிரியர்; அஃது அரசன்மேலுள்ள அன்பேயன்றி †அறிவின்சிறப்பன்று; ஆதலால் அளவிட்ட பொருள் வாயில்களில் வினைசெய்யவைத்துத் தான் கருதியவளவோ அதிலும் மிகுதியாகவோ செய்வோரை அமைச்சராகத் தெளிக. அதினின்றும் அவரது வினைத்திட்பம் அறியப்படுகின்றமையால்.‡

அவ்வாறன்றென்பர் §கௌணபதந்தன் என்ற ஆசிரியர். ஏனென்றால் அமைச்சர்க்குரிய பிறகுணங்களையுடையரல்லர் அவர். அதனால் வமிச மந்திரி பரம்பரையிலுள்ளோரை யமைச்சராகத்தெளிக; அவரது பூர்வசரிதம் அறியப்படுகின்றமையால் தமக்கு அரசன் பிழைசெய்யினும் தொன்றுதொட்டுவரும் தொடர்புபற்றி அவனிடத்தினின்றும் விலகார். விலங்குகளிடத்தும் இக்குணம் காணப்படுகின்றது. பசுக்களும் பழக்கமற்ற கூட்டத்தையொழித்துப் பழகியகூட்டத்துடன் சேருகின்றன.

அவ்விதமன்றென்பர் $வாதவியாதியென்ற ஆசிரியர். இவர் அரசனது செல்வத்தை முழுவதும் தமதாக்கித் தம்மை யரசராகக் கருதி வேண்டியவாறு ஒழுகுவர்; அதனால், பழையரல்லராயினும் நீதிநூல் கற்றறிந்தோரை யமைச்சராகத்தெளிக; அப்புதியோர் கோலோச்சுமன்னனைக் கூற்றெனஅஞ்சி அவனுக்குப் பிழைசெய்யார்.

---

* பிசுனன் - நாரதன்.

† "காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்." —(திருக்குறள் ௫0௭.)

‡ "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்." —(திருக்குறள். ௫0௫)

§ கௌணபதந்தன் - பீஷ்மன்.

$ வாதவியாதி - உத்தவன் (ஸ்ரீகிருஷ்ணனுடைய மந்திரி).

இதனையும் மறுப்பர் *பாகுதந்தீபுத்திரன் என்னு மாசிரியர். நீதி நூல்யாவுங் கற்று வினைக்கண், பயிற்சிபற்றோனொருவன் வினைசெய்யுங் கால், கலக்கமெய்துவன்; ஆதலால் தெளிந்து தெரிதற்கண் குணமே சிறந்த கருவியாயிருத்தலால், குடிப்பிறப்பு, அறிவு, தூய்மை, வீரம், அன்புடைமை என்ற இக்குணங்களையுடையோரை யமைச்சராகத் தெளிக.

முற்கூறியவை யாவும் பொருந்துவன என்பது கௌடில்யரது மதம். ஏனென்றால், ஒருவனது தகுதி அவனது வினைசெய்யுமாற்றலால் தெளியப்படுகின்றது.

ஆதலால், முற்கூறிய இயல்புகளால் உடன்பயின்றோர் முதலியோரது நிலைமையைக் காலம் இடம் கருமங்கட்கேற்ப ஆராய்ந்து அவரை †அமைச்சராகக் கொள்ளவேண்டும். அதுவன்றி ‡மந்திரிபதவியில் வைத்தல்கூடாது.

விநயாதிகாரம் என்ற முதலதிகாரணத்தில் அமைச்சரைத்தேரிதல் என்ற எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

பிரகரணம் ௫— மந்திரி புரோஹிதரைத்தேரிதல்.

அத்தியாயம்—௯.

தன்னாட்டிற்பிறப்பு, குடிப்பிறப்பு, §சுற்றமுடைமை, சிற்பநூல் நீதிநூல்களிற்பயிற்சி, இயற்கையறிவு, மறதியின்மை, கடிதில் வினை செய்துமுடித்தல், சொல்வன்மை, மனத்தேற்றம், ¶பிரதிபையுடைமை, ஆண்மை பெருமை யென்ற ஆற்றலுடைமை, $கிலேசங்களைப்பொறுத் தல், தூய்மை, சிநேகதியல்பு, அரசன்மேற் பேரன்பு, நல்லொழுக்கம்,

---

* பாகுதந்தீபுத்திரன் - இந்திரன்.

† அமைச்சர் - அதிகாரிகள்

‡ மந்திரி - சூழ்ச்சித்துணைவன். (Counsellor).

§ நெறியிற்பிறழுங்கால், திருத்தப்படுதற் கெளியனாயிருத்தல் என்றும் கொள்ளலாம்.

¶ உத்தரமுரைத்தற்கும் பிரதிக்கிரியைசெய்தற்கும் வல்லமை.

$ கிலேசம் - பசி தாகம் குளிர் சூடு என்றவருத்தங்கள்.

சரீரபலம், நோயின்மை, மனத்திட்பம், செருக்கின்மை, சபலமின்மை, இனியபார்வை, பகைசெய்யாமை என்னு மிக்குணங்கள் அனைத்தும் பொருந்தியவன் உத்தமனான மந்திரி. இவைகளில், காற்பங்கு குறைந்தவன் மத்தியமனான மந்திரி. அரைப்பங்கு குறைந்தவன் அதம மந்திரி.

இவற்றுள், ஆப்தரிடமிருந்து அவரது நாடும் குடிப்பிறப்பும் சுற்றமும், உடன்பயின்றோரிடமிருந்து சிற்பநூல் நீதிநூல்களிற் பயிற்சியும், செய்யும்வினைகளிலிருந்து இயற்கையறிவும் மறதியின்மையும் கடிதில் வினைசெய்யுமாறும், சம்பாஷணைகளிலிருந்து சொல்வன்மை மனத்தேற்றம் பிரதிபை என்ற இக்குணங்களும், இடுக்கண்வந்துழி ஆண்மை பெருமை என்ற ஆற்றலும் கிலேசங்களைப் பொறுக்குமாறும், நடையினின்று தூய்மை சிநேக இயல்பு பேரன்பு என்னும் குணங்களும், இனத்தினின்று நல்லொழுக்கம் சரீரபலம் நோயின்மை மனத்திட்பம் செருக்கின்மை சபலமின்மை என்ற குணங்களும், நேரில் இனியபார்வையும் பகைவிளையாமையும் ஆராய்ந்து அறிதல்வேண்டும்,

அரசுபுரிதல், காட்சி ஆகமம் கருத்து என்னு மளவைகளால் நடைபெறுவதாம். கண்கூடாகவறிவது காட்சி, தக்கோர்வாய்க்கேட்டல் ஆகமம், செய்தவற்றினின்றும் செய்யவேண்டுவனவற்றை ஊகித்தறிதல் கருத்து.

வினைகள் பலவாயும் பலரால் ஒருபொழுதில் முடிக்கவேண்டுவன வாயும் இருத்தலினாலே தேசகாலநிமித்தங்களான குற்றங்கள் வாராமைப்பொருட்டு நேரிற் செய்யக்கூடாத கருமங்களை அமைச்சராற் செய்வித்தல்வேண்டும் இவ்வாறு அமைச்சரைத் தெரிதல்வேண்டும்.

நான்குதலைமுறையாக ஓங்கி வளர்ந்துவரும் குலத்தையும் நெறியிற் பிறழாத வொழுக்கத்தையும் உடையவனும் ஆறங்கங்களையுடைய வேதம் சோதிடம் நிமித்தம் தண்டநீதி என்ற நூல்களைக் கற்றறிந்தவனும், தெய்வத்தாலும் மக்களாலும் வரும் துன்பங்களை முறையே அதர்வத்திற்கூறிய சாந்திகளாலும் சாமமுதலியவுபாயங்களாலும் நீக்கவல்லவனுமானவனைப் புரோகிதனாகத்தெளிக. புரோஹிதனை அரசன்,

ஆசிரியனை மாணாக்கன்போன்றும், தந்தையைப் புதல்வன்போன்றும், ஆண்டானை அடிமைபோன்றும் வழிபட்டொழுகுதல்வேண்டும்.

புரோகிதனால் போஷிக்கப்படுவதும், மந்திரியின்சூழ்ச்சியாற்காக்கப்படுவதுமான அரசர்குலம் நூலோதியவழிநின்று, வேலின்துணையன்றியே வெல்லவேண்டுவதை யெளிதில் வெல்லுகின்றது.

விநயாதிகாரமென்ற முதலதிகாரணத்தில் மந்திரி புரோகிதரைத் தெரிதல் என்ற ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

பிரகரணம். ௬—அமைச்சரது தூய்மையும் அஃதின்மையும் உபதைகளால் தெரிந்துகொள்ளுதல்.

அத்தியாயம்—௧0.

மந்திரி புரோகிதரைத் துணையாகக்கொண்டு, அமைச்சர்களைச் சாமானிய அதிகாரங்களில் நியமித்து உபதைகளாற் சோதனைசெய்தல் வேண்டும்.

வேட்டல் ஓதல்களில் உரிமையில்லா ஒருவனுக்கு அவற்றைச் செய்விக்குமாறு வியாஜமாக ஏவப்பட்டு, அதனாற் கோபமடைகின்ற புரோகிதனை அரசன் அதிகாரத்தினின்றும் நீக்க, அதிகாரம் இழந்த புரோகிதன், ஒற்றுளரில் ஒருவகையரான சத்திரிகளைக்கொண்டு, அமைச்சராவார் ஒவ்வொருவரையும் அடைந்து சூளுறவோடு "இவ்வரசன் அறவோனல்லன், இவனையொழித்து இவன்குடியிற்பிறந்தானொருவனையாவது, *அவருத்தனையாவது, அரசுக்குரியகுலத்திற்பிறந்தோனையாவது, அனைவராலும் அரசுக்குரியனென்று ஆதரிக்கப்பட்டோனையாவது, குறுநிலமன்னனையாவது, காட்டையாள்வோனையாவது அல்லது நம்மால் அரசுக்குரியனென்று தெளியப்படுவோனையாவது அவன் அறவோனுயிருத்தலையறிந்து அரசனாக்குவோம். இது யாவர்க்கும் இயைந்தது. நும் கருத்தென்னை? என இதை மறுப்பாராயின் அவர் தூயர் என்று கருதுக. இது அறவுபதை.

---

* அவருத்தன்—அருகிலிருந்து தீங்குசெய்யவொட்டாது ஊருக்குப்புறத்தே அரசனாற் காவல் செய்யப்பட்டவன்.

தீயோனொருவனை மேனிலைக்குக்கொணர்ந்தான் என்ற காரணத்தைச்சொல்லி (வியாஜமாக) அதிகாரத்தினின்றும் விலக்கப்பட்ட சேனைத்தலைவனொருவன், அரசனை யழித்தற்பொருட்டுச் சத்திரிகளைக் கொண்டு, அமைச்சர் ஒவ்வொருவரையும் அடைந்து அவர் விரும்பும் பொருளைத் தருவதாகச் சொல்லிச், சூளுறவோடு *"உலோபித்தன்மையோன் இவ்வரசன்; இவனைப்போக்கி இவன் குடியிற்பிறந்தோனொருவனையாவது அல்லது அவருத்தனையாவது, அவன் கொடையும் உரிமையு முடையனாயிருத்தல் அறிந்து அரசனாக்குவோம், இது யாவர்க்கும் இயைந்தது. நும் கருத்தென்ன?" என இதை மறுப்பாராயின் அவர் தூயரெனத் தெளிக. இது பொருளுபதை.

தொன்றுதொட்டு உரிமையொடு பயின்று ஆதரிக்கப்பெற்ற தவமுதுமகள் ஒருத்தி †மகாமாத்திரன் ஒவ்வொருவனையும் கிட்டி "அரசன் மனைவி உன்னைக் காமுற்று உன்னோடுகூடு முபாயத்தை நாடுகின்றனள்; அவளைக் கூடுவையாயின், பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடும்" என, இதை மறுப்பானாயின் அவன் தூயன் எனக்கொள்க. இது இன்பவுபதை.

யாதாயினும் ஓர் ‡கொண்டாட்டத்தின்பொருட்டு ஓர் அமைச்சனால் ஏனையோரை அவனில்லின்கண் அழைப்பிக்கச்செய்து, அதனால்

---

*அறவுபதையிற் கூறியவையெல்லாம் பொருளுபதைக்கியைந்தவாறு இங்கு வருவித்துக்கொள்ளவேண்டும்.

† மத்தியம அதிகாரத்தை யாளும்அமைச்சன்.

‡ இங்கு மூலக்கிரந்தத்திற் காணப்படும் "ப்ரவஹணம்" என்ற சொல்லுக்குப் பொருள்விளங்கவில்லை. இந்நூலின் புராதன மலையாளத் தமிழுரையொன்றில் இதற்குப் "ப்ரீதி போசனம்" எனப் பொருள்கொடுத்துள்ளது. இப்பொருள் நிகண்டுகளொன்றாலும் ஆதரிக்கப்படவில்லையாயினும், இங்கு சந்தர்ப்பத்திற்கு மிகப்பொருந்துவதென்பது கருதத்தக்கது. இங்ஙனம் பொருள்கூறுதல்பற்றி இவ்வுரையின் பிராமாண்யம்தானும் சந்தேகத்திற்கு ஆஸ்பதம் என்பர் சிலர். "அறம்பொருளின்ப முயிரச்ச நான்கின்" என்ற குறளுரையில், அர்த்தசாஸ்திரத்தில் உபதைகளை விரித்துக்கூறும் சொற்றொடர்பைச் சுருக்கமாக மொழிபெயர்த்துக்காட்டிய பரிமேலழகரும் "ப்ரவஹணநிமித்தம்" என்பதன் ஸ்தானத்தில் "ஒரு நிமித்தத்தின்மேலிட்டு" என்று கூறி ப்ரவஹணம் என்னும் சப்தத்தின்பொருள் கூறாதொழிந்தனர்.

அரசன் கலக்கமுற்றவன்போற் பாவித்து, அவரனைவரையும் செல்வத்தையும் வெகுமதியையும் அபகரித்துத் தளைப்படுத்தல்வேண்டும். அரசனால் முன் தீங்குசெய்யப்பெற்ற கபடமாணுக்கனும் ஒற்றனொருவன், தளை செய்யப்பட்ட அமைச்சருள் ஒவ்வொருவரையும் அணுகி, கூனுறவோடு, "தீநெறியிற் செல்கின்றான் இவ்வேந்தன்; நாம் இவனையொழித்து வேறொருவனை அரசனாக்குவோம். இது யாவர்க்கும் இயைந்தது. நும் கருத்தென்ன?" என, இதை மறுப்பாராயின் அவர் தூயர் எனக் கொள்க. இது அச்சவுபதை.

இவற்றுள் அறவுபதையால் தெளிந்தோரை *தர்மஸ்தீயத்திலும் †கண்டகசோதனத்திலும்; பொருளுபதையால் தெளிந்தோரை இறைப்பொருள்கூட்டுதலிலும் பொருள்காத்தலிலும்; இன்பவுபதையால் தெளிந்தோரை ‡அகத்தவும் புறத்தவுமான விஹாரங்களைக் காப்பதிலும்; அச்சவுபதையால் தெளிந்தோரை அரசனது மெய்காத்தல் முதலிய கருமங்களிலும் நியமித்தல்வேண்டும். நான்கு உபதைகளாலும் தெளிந்தோரை மந்திரிகளாகக்கொள்க. உபதையொன்றாலும் தெளியப்படாதாரைக் §கனித்திரவியங்களிலும் யானைக்காடுகளிலும் தொழில்செய்வதற்கு உபயோகித்தல்வேண்டும்.

அறம் பொருள் இன்பம் அச்சம் என்னும் உபதைகளால் தூயராகத் தெரிந்த அமைச்சரை அவரது தூய்மைக்கேற்பத் தத்தமக்குரிய அதிகாரங்களில் நியமித்தல்வேண்டும், என்பது ஆசிரியரின் துணிபு.

---

* தர்மஸ்தீயம் - நியாயஇலாகா.

† கண்டகசோதனம் - குடிகளைக் கள்வர், சுற்றத்தார், பகைவர் என்றிவர்களால்வரும் துன்பங்களினின்று காத்தல்.

‡ அகத்தவிஹாரம் - உரிமைத்தேவியரது அந்தப்புரம். புறத்தவிஹாரம் - காமக்கிழத்தியர் இருக்குமிடம்.

§ கனி - பொன் மணி முதலியவற்றின் உறைவிடம்.

ஆயின், அமைச்சரது தூய்மையைத் தெளிதலில் அரசன் தன்னை யும் தேவியையும் இலக்ஷியம் செய்யற்பாலனல்லன் என்பது கௌடில் யர் மதம்.

நீரை நஞ்சினுற் கெடுக்குமாறுபோலத் தூய இயல்பினராய அமைச் சரைத் தீட்டுப்படுத்தல் தக்கதன்று ; ஏனென்றால் உபதைகளாற் கலக்க மெய்திய அமைச்சனொருவன் பிணங்குவானாயின், ஒருக்கால் அதற்கு மருந்து பெறுதற்கரிதாகிவிடும்.

நான்கு உபதைகளாலும் கலக்கப்பட்ட வலியோரது மனம் தாம் துணிந்தவற்றை நிறைவேற்றுவதில் ஊக்கம் குன்றுவதில்லை.

ஆதலால், நால்வகை உபதைகளிலும் 'புறத்தோரை இலக்ஷியமாக் கிச் சத்திரிகள் வாயிலாக அமைச்சரது தூய்மையும் அஃதின்மையும் ஆராய்தல்வேண்டும்.

விநயாதிகாரம் என்ற முதலதிகாரணத்தில் அமைச்சரது தூய்மையும் அஃதின்மையும் உபதைகளால் தெரிந்துதெளிதல் என்ற பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

[தொடரும்]

G. ஹரிஹரசாஸ்திரி,
திருவனந்தபுரம்.

புரூரவசரிதை.

[௬௧அ-ம் பக்கத்தொடர்ச்சி].

தேவிசேர்படலம்.

ஆழ்கடலினன் றவிடுமெம்பியிடைவெம்புந்
தாழ்குழன்மடப்பிடிதனைத்தெரிவுறுதே
வீழ்கொடியவஞ்சனறைசெய்துவெளிகாணு
தாழ்முறையின்வீதமொடுமுத்திரையுளுற்றி. (௧)

தன்னலதுவாயிலிடைகாவல்பிறர்சாரா
துன்னியுறைகின்றனனவ்வோடரிவிழிப்பூண்
அன்னமனையாளதினகத்திலுறைகின்ற
தின்னபரிசென்னவெவரேயறியவல்லார். (௨)

ஊணிலளுறக்கமுமிலாள்விழியிலொன்றுங்
காணிலணிணைப்பிலண்மறப்பிலள்கருத்தும்
பூணிலள்பெயர்ந்திலள்புலம்பிலணிலஞ்சே
ராணியிலறைந்தனளிருந்தனளயர்ந்தே. (௩)

கைவழிபுனற்கடலின்மூழ்கவருகண்ணுள்
வெவ்வழலனிட்டதளிரேயனையமெய்யாள்
பையரவின்வாயின்விழுதேரைநிகர்பண்பா
ளுய்யும்வகையில்லெனவுயிர்ப்புறுமுயிர்ப்பாள். (௪)

கம்பமதயானைநுகருங்கனியும்வெந்த
வெம்புரியுமாகும்வகையுள்ளழியுமெய்யாள்
அம்பியிடைவெம்புபலநாள்கழியவாதி
நம்பனருளாலவனுணுதைநணுகிற்றால். (௫)

வேறு.

கம்பக்கடலிற்கதியிற்செலுமோ
ரம்பிக்குளிருந்தவரச்சமுறப்

பம்பிப்புயலும்படர்சூறையுமாய்த்
தும்பிக்குநிகர்த்தசுழற்றினவால். (௬)

அரைசுற்றுமாரவடமாயகலுந்
திரைசுற்றியபாயுயர்திங்களுமாய்க்
கரைசுற்றுகடற்கிடைமந்தரமாம்
வரைசுற்றுவதொத்தமரக்கலமே. (௭)

உடுவிற்றனநீள்கொடியுக்கனவான்
றொடுநெற்றியகம்புதுணிந்தனபா
யிடையிற்றனநாழியிகந்தனநீர்
தடைபற்பலவீழ்ப்பதகைந்திலவால். (௮)

நின்றோர்கண்மறிந்தனர்நீரின்விழப்
பொன்றாவணிகன்புலன்வேறுபடக்
குன்றாவிரதக்கொடிகற்பின்வழிச்
சென்றோர்துறையுற்றதுசெல்கலமே. (௯)

வேறு.

அத்துறையினக்கலமடைந்ததரசன்பால்
ஒத்தறிவெனக்கருதுமொற்றர்களுரைப்ப
வித்தகர்தமைச்செலவிடுத்தடைகலத்தின்
எத்திரவியப்பொருடெரித்திடுமினென்றான். (௧௦)

என்றரசுரைத்தபடியத்துறையினெய்தி
யன்றடையுமம்பியினரும்பொருளனைத்து
மொன்றொழிகிலாவகையுணர்ந்தனர்பினங்கோர்
பொன்றிகழிலச்சினைபொருந்துமறைகண்டார். (௧௧)

திறப்பரியவூகமொடுமுத்திரைசெறித்த
வறைக்குளரிதாயபொருளென்கொலெனயாரும்
பெறற்கரியசெல்வமுளபேதைவணிகேசன்
நிறைத்தபொருளுண்டதனைநீர்வினவலென்றான். (௧௨)

பூணுமணியாவையினுமேன்மைதருபொன்னுக்
காணியெனலாயபொருளொன்றுளததன்சீர்

காணுவதுமன்னவனெனக்கழறயார்க்குந்
தாணுவெனுமன்னனிடைசார்ந்திவையுரைத்தார். (கங)

உரைத்தமொழிகேட்டரசன்யாம்வருதுமொல்லை
திரைக்கடலினம்பியிடைசேமமதுவாக
நிரைப்படையையேவவவைநென்னலினடைந்த
வரைத்தகையதோளினரையுத்திரெனமற்றோர். (கச)

என்றுவருவாய்கொலிவணென்றுளியிருந்தே
வன்றிறலரக்கனோடுமாறெதிர்புகுந்துன்
வென்றிதருகின்றவரிருக்கவினவாதே
நின்றவிவரைத்துணைநிரப்பிடநினைந்தாய். (கரு)

எம்மிலுமுயர்ந்தபொருணல்கவுமியைந்தாய்
வம்மினெனமுந்துறவிருக்கவுமதித்தாய்
அம்முதல்வரைச்செலவனுப்புவதல்லாதே
வெம்முனையிலெம்மையும்விடுப்பதலவென்றார். (கசு)

சேனைமுதல்வீரரிவைசெப்பிடுதல்கேளாத்
தானமழைவாரணமெனத்தகையமன்னன்
கூனவரிவில்லினொடுகொண்டலெனநின்ற
வேனையவிரட்டையரைநோக்கினனிசைத்தான். (கஎ)

சங்குதவழுங்கடலின்மீதுதவழ்கின்ற
வங்கமிசைசேறிரெனயாவருமறுத்தார்
அங்கதனையின்றிரவுகாக்குமடைவாக
வுங்கள்விசயத்திறமுரைத்திடுமினென்றான். (கஅ)

மேருவழிசென்றமரர்விண்புகுதவோவிப்
பாரினையகழ்ந்துரகனிற்படரவோபைங்
காருருமினைக்கொணரவோவலதுகாவ
னீரிடையினோடமிசைசெல்லுவதுநேரோ. (ககூ)

அடற்பரிகடக்கரியடும்படைநெடுந்தே
ருடைக்கடனடத்திவருமன்னருயிர்கக்கக்
குடற்கருநிறத்தசைகுழப்பியொருகூழா
யிடக்கடவிர்பூதவுணவென்பனவுமின்றால். (உ0)

எப்பணியுரைத்திடினும்யாமிசைவதேயென்
றப்பணியுமோடமிசைகீழ்கடலினுற்
றுப்பணியிதழ்க்கொடிதுயர்க்கடல்சுவற்ற
வெப்பணிசுடர்க்கடவுண்மேல்கடலினுனன். (உக)

வேறு.

புழுங்குநெஞ்சொடுமென்பெருங்கரங்களைச்சுருக்கிமேல்புடைநின்று
முழங்குகின்றநான்மறைகளுமிரங்கிடத்திசாமுகஞ்சவிருன்ற
வழங்குசூளினுலிரணியத்திருவுருமறைமுதல்வாயார
விழுங்குமால்வயிற்றாழ்ந்தனகருங்கடற்றாழ்ந்தனன்சுடர்வெய்யோன். ()

சிங்கலின்றியதிறல்கெழுமன்னவர்பகைப்புலத்திறனெல்லாம்
அங்குநின்றனவறிந்திடச்செலவிடுமொற்றெனலாமன்றே
சங்கவாலுளைப்பசும்பரியேழுடைச்சக்கரத்தேர்வேந்தன்
பொங்குவாலுளைத்திரைக்கடலூடுமுன்போக்கியகதிர்மாதோ. (உங)

வெம்மைகாட்டியவன்மனவளமினிமேற்றெரிந்திடுமென்ன
மும்மைகாட்டியவுலகிடையாவருந்தெரிவுறமுதிராத
கொம்மைகாட்டியகுவிமுலைமலர்முகக்குயின்மொழிமயிலன்னாள்
செம்மைகாட்டியமனமெனத்திகழ்ந்தனசெக்கரெண்டிசையெல்லாம். ()

கரிந்தமைநிகர்கரும்படாம்போர்த்தனகளியிருட்பிழம்பாசை
தெரிந்தவான ......யாவையுமில்லெனச்செய்திடுதிறத்தாலே
விரிந்தகீர்த்தியென்றொருபொருள்கொண்டிடார்வியனிலாப்பொருளெல்லா
மிருந்துமில்லெனமறைப்பதேபோன்றனவிருநிலப்பரப்பம்மா. (உரு)

வையகத்தினினல்குரவாற்சிலவைகல்வைகுநர்மேனாட்
பெய்தவத்தினிற்பாக்கியம்பூத்தெனப்பிறங்கியவுடுக்கூட்டத்
தையமற்றகார்மையினையிருதுவார்த்தளாவியதெனச்செய்த
செய்யகத்தினில்வெண்முளைதெளித்தனவொத்தனதிகழ்வானம். (உசு)

தழைந்தசாகையின்பெரும்பணைபோக்கியசதுமறைப்பொருளான
கொழுந்தளாவியபதயுகவெண்ணிலாக்கூரெயிற்றொருகோலம்
விழுந்தபாதலத்திடைபுகுந்துலகொடும்விரிபுனலிடைமீள
வெழுந்ததாமெனக்கருங்கடன்முகட்டில்வந்தெழுந்ததுசெழுந்திங்கள். ()

ஆய்ந்தமந்தாவரையிணையாவொடும்பிணித்துவானமோசர்
காய்ந்தநெஞ்சுடைத்தானவர்தம்மொடுநட்டனர்கடைநாளில்
வாய்ந்தநீரிடையரிபகவானெனும்வளர்துழாயணிமாயன்
ஏந்துபொற்கடத்தமுதெனக்கடன்முகட்டெழுந்ததுசெழுந்திங்கள். ()

புலன்கள்யாவையும்புரையறவிளநிலாப்பொழிகதிர்பொலிவெய்தக்
கலங்குவாரிதியிரசதமுருக்கியசிவைமுகத்தெழில்காட்ட
அலங்கலந்துழாயஞ்ஞனக்கிரியனலர்மலர்க்கரமேனின்
றிலங்குசங்கம்வந்தெழுந்தெனக்கடன்முகட்டெழுந்ததுசெழுந்திங்கள். ()

உண்ணசைப்பெருஞ்சகோரமுந்தணப்பிலாருள்ளமுங்களிப்பெய்தக்
கண்ணிறைத்தபொற்சல்லடைப்பாலெனவொழுகியகதிர்க்கற்றை
யெண்ணிறைக்கலைத்தொழின்மதிக்கம்பியனெழிற்காந்திலைத்தா ற் று ம்
வெண்ணிறத்தபூந்தந்துவின்பாவெனவிரிந்ததுவிசும்பெல்லாம். (௩௦)

அதிரும்வார்திரைக்கருங்கடல்வெளர்த்தன அண்டமும்வெளிதான
வெதிர்குலாயமைக்குன்றமுமநிறம்விரிந்தனபுவியெல்லாம்
பொதியுமெய்ம்மயிர்ப்புறமெனும்புற்களுட்நரைத்தனபுலவோர்கள்
முதியதாகுமிப்புவனமென்றுரைத்தசொன்முடித்ததுநிலவம்மா. (௩௧)

தோன்றுகின்றநல்வனப்பினிற்றன்மையிற்றூய்மையினுலகான
மூன்றினுக்குநின்றிலங்குறும்புகழ்நிலாமுற்றுவித்திடுமொய்ம்பி
லான்றதொல்குணமருள்பலகலைவிரித்தகன்றவான்மகவொன்றை
யீன்றதாயெனக்களிப்பின்மிக்குயர்ந்தனவெறிதிரைக்கடன்மாதோ. ()

பயிலும்வெண்பணற்சிற்றிலுண்டாட்டயர்பாத்தியரமக்காஸை
யுயிருணுந்தனவாதலாலநுந்தயாவுறங்கலவெனநெய்தல்?
கயிரவத்துவர்வாய்விண்டுவேயில்மீன்காத்தவர்குலந்தீரத்
துயில்திர்யான்விழித்திருப்பனென்றலர்ந்தனகாவிவான்றுறைதோறும்.

புரிந்தவன்பொடுமுயிர்க்குயிராய்ப்புணர்ந்தொருவர்கைப்பொருளெல்லா ந்
தெரிந்துகொண்டுபின்னுடையவற்சேர்பொதுத்தெரிவையரெனலா மா ல்
அருந்தவின்னறுச்சொரிந்தபூந்தாமரைவறிதுறவதுநீத்து
விரிந்தசெவ்விதழாம்பலந்தேத்துளிவிரும்பிவீழ்சுரும்பம்மா. (௩௪)

வில்லுறங்கியநுதலினர்கலவியின்விரைந்துறங்கினர்மிக்க
வெல்லுறங்கியவளைக்குலம்வாலுகத்திடையுறங்கினசெய்ய

வல்லியங்கமலாசனமன்னனுளருண்மகார்தமையாரப்
புல்லுமென்பபோற்பார்ப்பினைத்தழுவிநின்றுறங்கினபுள்ளெல்லாம்.(௩௫)

வேறு.

அன்னகாலையிலிளவன்மற்றவன்றனைநோக்கிக்
கன்னல்பாதியுங்கழிந்தனநின்றவிக்கங்குல்
இன்னலாகியதுயில்புரிந்திடாவகையிருப்பான்
முன்னர்காதைகளுண்டெனின்மொழியெனமொழிந்தான். (௩௬)

கேட்டமுன்னவனிளநகைமுதுநிலாக்கிளர
வாட்டமின்றியமைந்தகேளுவரிசூழ்வளாக
நாட்டினிற்கதைகேட்டனைநம்பிநும்பட்ட
வேட்டினுக்கடங்காக்கதைகேட்டிலையிளையோய். (௩௭)

ஐயவக்கதையாயினுமுரைத்தியென்றறைய
வெய்துயிர்த்துமெய்ம்மெலிவுறவுளநனிவிம்மக்
கொய்துணர்க்குழலன்னைதன்செவித்தொளைகுறுக
வெய்திறற்சிலையிளவலுக்கிசைத்தனனிதனை. (௩௮)

மைந்தகேட்டியான்மதிதிருமரபினைவளர்த்தோன்
புந்திதன்வயிற்றோன்றியபொருவருந்திறலான்
உந்துதெண்டிரையுலகெலாமொருதனிக்குடைக்கீழ்
இந்தமாநகரிருந்தரசியற்றியவிறைவன். (௩௯)

ஓவமொத்தசீர்வாசவதத்தையென்றுரைக்கும்
பூவைபொற்குவட்டெழினலத்திளமுலைபுணர்ந்தோன்
மாவிரித்தகட்டிருமுகத்துருப்பசிமயறீர்த்
தாவலுற்றிடப்புரந்தரன்கொடுத்திடவணைந்தோன். (௪0)

தன்மனத்திடைவேதமூன்றுதித்திடத்தந்தோ
னன்மையப்பயன்மூன்றிலொன்றினைத்துணைநயந்தோன்
றொன்மையப்பெருங்கோட்களின்மண்டலந்தொடர்ந்து
வின்மலைக்குமேல்விண்ணுலகினுஞ்செலும்வீரன். (௪௧)

ஆழிமாநிலம்புரந்திடுநாளிலங்கொருநா
ளேழிசைத்திருமுனிவரனவ்வயினெய்தித்

தாழ்வுறும்படிசவுரியுன்பால்வரச்சமைந்தான்
வாழிமன்னவவெனவுரைத்தகறலுமன்னன். (சஉ)

முதுமகன்றனைநோக்கிநின்றருந்தவமுயலக்
கதுமெனப்புகுந்துரைத்தனன்றன்னதிகாரம்
விதுமகன்மகனொருமுறைவருகெனவிளம்ப
எதுகொலுங்கருத்திளமையோமுதுமையோவெய்தல். (சங)

எனவுரைத்தலுமனைவிபாலித்திறமியம்ப
வனைமலர்க்குழலிளமையேயடைகெனவழங்கக்
கனைகழற்பொலிகருங்கழன்மன்னவன்காரி
முனமெதிர்ந்திவைமொழிந்திடமுதுமகனகன்றான். (சச)

காரிபோயபின்வசந்தமாங்காலம்வந்தணுக
வேரியந்தொடையான்மலர்ப்பொழில்விரவுதலும்
பாரடங்கலுநடுக்குபோராக்கனப்பதியி
னூரடங்கலுந்தன்னதாக்கவர்ந்துகொண்டுறலும். (சரு)

கேட்டமன்னவனமர்க்கெனவெழுதலுங்கெண்டை
வாட்டடங்கணுள்சனிசெயலிதுவெனமற்றோர்
நாட்டினெய்துதல்நன்றெனப்போதலுநடுவே
யீட்டுவெம்பசியாலிருதனயருமிரங்க. (சசா)

அருமைமைந்தர்களேற்கவுண்ணமுதுநல்குதுமென்
றொருதுகிற்றலைகட்டியசோறவிழ்த்துதவ
நெரிகுழற்றிருநோக்கலும்புழுக்களாய்நெளியத்
தருமமன்னனும்விழிவழிதந்தனன்றுரை. (சஎ)

தனையர்வெம்பசிகாண்டலுந்தரிக்கிலாகித்
துணையினிற்சென்றுசந்திரகிரிப்பதிதுன்னி
நினையுமாத்திரத்தொருவணிகேசனேர்ந்திடலு
மனையவன்றனிமனைக்கணினமர்ந்திடுநாளில். (சஅ)

துன்னுமிந்தனமெடுக்கவுமன்னவன்றுணைவி
செந்நெல்குத்தவுமாயினாரதிலொருதினத்திற்
பொன்னெனப்பெறுமைந்தரும்பிதாவொடும்போத
மன்னுமாக்கலத்தேற்றினன்றிருவையவ்வணிகன். (சகூ)

மீண்டுமன்னவன்மனைவியையெவனெனவினவ
வாண்டுநின்றவர்புகன்றிடவாற்றலனாகி
யீண்டிருப்பதேபழுதெனமகாரொடுமேகிக்
கூண்டநீர்ப்பெருக்காறுகண்டதன்கரைகுறுகி. (௫0)

ஐயன்மீரிவணின்மின்யானளவறிந்திடவென்
றெய்துகாலையிலிருவருந்தொடர்ந்திடவிறைவன்
வெய்தினங்கொருமதலையைத்தருவொடும்வீக்கிக்
கையினோர்மகவேந்தியவ்வாற்றினைக்கடந்து. (௫௧)

திரிந்துபோதவச்சேய்தொடர்ந்திடலுமச்சேயை
வரிந்தனன்பெருமரத்தொடும்பின்னையம்மன்னன்
முரிந்ததெண்டிரையாற்றிடையிறங்கலுமுரிக்
கருங்கடக்களிறென்னவவ்வாற்றொடுங்கழிந்தான். (௫௨)

தந்தையாகவோராயனங்கெய்தியத்தனையர்
சிந்தைநோயறத்தன்பதிசேர்த்தியேவளர்த்தா
னந்தமன்னவன்செய்தியுமனையவடிறனு
மெந்தவாறெனத்தெளிவுறக்கேட்டிலேனின்னும். (௫௩)

ஆயமன்னவனாரெனிற்புரூரவாவாமாற்
போயமங்கையும்புண்டரீகக்கொடியென்பாள்
தீயவெந்துயர்க்கடல்விழுமக்களைத்தெரிக்கின்
வாயினாற்சொலும்யாமெனவுணர்தியால்மைந்தா. (௫௪)

இந்தமாக்கதைநம்பெருங்கதையெனவிளைய
மைந்தனார்க்குரைத்துள்ளநெக்கழிதலுமாதர்
சந்தமாமுலைப்பால்பிதிர்ந்தொழுகமெய்தளர்வுற்
றந்தமாக்கலத்தகத்திருந்தாகுலித்தழுதாள். (௫௫)

வேறு.

இன்னுயிராமக்காணும்மையனெவணடைந்தான்
அன்னவனுநும்மைமறந்துமகன்றானோ
பின்னிமரத்திற்பிணிப்புறவும்பெற்றீரோ
ஆன்னுமிடையர்குலத்தோன்றலுநீரானீரோ. (௫௬)

தேமாங்கனியிற்றெவிட்டாததீங்குதலை
யேமாங்கதனேகனகாங்கதாவெனலும்
கோமாங்கருணைக்குரிசிலிருவோருந்
தாமாங்கெழுந்துமணிக்கதவைத்தள்ளினார். (௫௭)

ஆங்குற்றாருற்றவருமைமகாரைத்தழுவி
யேங்குற்றாளாவியிறந்தாள்பிறந்தாளால்
வீங்குற்றாண்மேனிவெதுப்புற்றாள்வெய்துயிர்த்தாள்
கோங்குற்றகொங்கையிற்பால்கொண்டுபுனலாட்டினாள். (௫௮)

அம்மையுமக்களுமாயாங்குழுதபேரோதை
செம்மையிலிதன்செவித்துளையிற்கேட்டலுமே
வெம்மையுடனெய்திவிலக்கியிவையாதெனலு
மெம்மையளித்தவெம்மோயென்றாரிணையில்லார். (௫௯)

ஊராரறியவுலகறியத்தொண்டுபுரி
தாரேறுகூந்தலைத்தம்மன்னையெனச்சாற்றினார்
ஆரேபுகல்வாரனியாயமேயிதனைப்
போரேறுமன்னவன்முன்சொல்வேனெனப்புகன்றான். (௬0)

அன்னதேயாகவெனவன்னவருமன்னை திரு
முன்னரேகாப்பமுறைமையறியானிரவு
கன்னல்போங்காறுமிருந்தான்கதிரோனு
மின்னதோர்தன்மையினைக்காண்பனெனவெழுந்தான். (௬௧)

வேறு.

உயர்பெருந்திறனெய்திடக்காலமோர்ந்தவரின்
வெயிலெழுஞ்சுடர்கங்குலைத்துரந்துமேவுதலு
மயலிலோர்துணையின்றியேயமர்க்களத்தடுபோர்ச்
செயலழிந்தவரெனப்பொலிவகன்றது திங்கள். (௬௨)

வைகறைத்துயினீங்கியேமன்னவர்மன்னன்
செய்யுரித்தியக்கருமங்கள்யாவையுந்திருத்திப்
பொய்யிலாநெறிப்புண்ணியர்பதமலர்போற்றித்
தையல்பாகனார்பதயுகத்தாமரைதாழ்ந்து. (௬௩)

ஒற்றைவால்வளைமுழங்கிடச்சாமரையுலவக்
கொற்றவெண்குடைநிழற்றரவந்தணர்குழுமக்
கற்றைவார்குழற்கதிர்முலைத்துவரிதழ்க்கனிவாய்ப்
பொற்றதாமரைப்பொன்னனார்மங்கலம்புகல. (௬௪)

தானைவேந்தர்கண்மந்திரச்சூழ்ச்சியிற்றக்கோர்
வானையும்மளந்தறிந்திடுங்கணிதநூல்வல்லோர்
ஏனைமன்னவர்முதியவர்கடக்களிறெனும்போர்
போனவென்றிவேற்பொருநருமருங்கினிற்போர்ப்ப. (௬௫)

தடங்கடற்படும்வாலசூரியனெனத்தயங்கி
விடுஞ்சுடர்ப்பொலிமணிபலகுயிற்றிவாய்விரிந்த
மடங்கலின்பிடர்தாங்கியபீடத்தின்மதர்த்த
குடங்கையிற்படக்கண்ணிியோடிருந்தனன்கொலுவில். (௬௬)

இமையவர்க்கிறையிவனெனவிருந்தவவ்வேலை
கமையினெஞ்சொடும்வணிகன்வந்தவன்கடைகாப்போர்க்
கமையவோதிடவன்னவர்மன்னனுக்கறையச்
சமையும்வேலினன்றருதிராலின்றெனச்சாற்ற. (௬௭)

வேத்தவைக்குழாத்துய்த்தனர்வணிகனவ்வேந்தன்
பூத்ததாமரைப்பொலன்கழல்நிலம்படவணங்கப்
பார்த்தமன்னனீயாரெனநென்னலிற்பரவை
சேர்த்தகப்பலிற்செட்டியானென்றிவைதெரித்தான். (௬௮)

அருங்கலத்தினிற்பொருளெலாங்கணக்கர்வந்தாய்ந்தார்
மருங்கிலோரறைதிறந்திலேனுனக்கெனவைத்த
பெருங்கலத்தினுக்கணிமுழுமணியெனப்பிறந்த
கருங்கண்வெண்ணகைச்செய்யவாய்ப்பைங்தொடிக்கன்னி. (௬௯)

அவ்வணங்கினைநென்னலிற்காவல்வந்தவர்கள்
மெய்வருந்திடப்பெற்றதாயென்றுபொய்விளம்பி
யெவ்வமற்றுளங்களிப்பனராகியேயென்னை
நொவ்வுறும்படிதள்ளினருள்ளதுநோக்கார். (௭0)

அந்தவாணுதலாரெனக்கேட்டியேலடியேன்
தந்தைதாதைதன்னடிமையின்வழிவந்ததையல்

மைந்தராமெனிலவருமென்வகையெனவருமா
லெந்தவாறெனக்கேட்டருளென்றிறைஞ்சினனால். (எக)

வேறு.

இதிலொருபொருளுளதென்னவெண்ணியே
மதிகுலமன்னவன்மற்றைவீரரைக்
கதுமெனத்தருகெனக்கடற்றுறைக்கணே
புதுமணிக்கலமிசையொருவன்போயினன். (எஉ)

வேறு.

சென்றனரசன்றிருவருளைச்செப்புதலு
நன்றாகவென்றிளையநம்பிதனைமுதல்வன்
என்றான்வரினுமிவணீங்கலென்றியம்பி
வன்றாட்சிலையேந்திமன்னவன்றன்முன்னானன். (எங)

வந்தவனையிந்தவணிகன்பெருஞ்சிறையைத்
தந்தவளென்றேயுரைத்ததன்மையுனக்குத்தருமோ
எந்தவகைசொல்லென்றிறையோன்வினவவவன்
முந்தவுரைக்கின்மொழிந்திடுவன்பின்னென்றான். (எச)

என்றியம்பமற்றவனுமெந்தைதனையீன்றபிதா
மன்றறியக்கொண்டவழிவழியேவந்தசிறை
யன்றியுமந்நாளெழுதுமாவணமுமுண்டுசும்மா
பொன்றுமருந்துண்பாருமுண்டோவெனப்புகன்றான். (எரு)

வேறு.

அதுபொழுதாசனுமன்னதாகுக
வெதுபெயரெதுபதியியம்புவாயென
நிதிபதியெனும்பெயர்நீங்கநின்றுளான்
விதுகிரிவிச்சுவகுபுத்தன்பேரென. (எசு)

தாயெனுமைந்தனைநோக்கித்தாயென
நீயுரைத்திடும்வகைநிகழ்த்துவாயென
நாயகசொலவொருநாள்கள்வேண்டுமே
ஆயினுமொருவழியறையக்கேட்டியால். (எஎ)

வேறு.

நெடுங்கடலுலகமெல்லாமொருகுடைநிழலின்வைக
மடங்கலாசனத்தின்வைகுமணிமுடிவேந்தர்வேந்தன்
ஒடுங்கலில்புகழான்புந்தியுதவியபுரூரவாவென்
றடங்கலர்ச்செகுக்கும்வைவேலாழியொன்றுடையவீரன். (௭௮)

சனிசெயலதனாலாளுந்தரணிபோய்வனம்போய்ச்சார்ந்து
கனிமொழிமனைபோய்த்தானுமாற்றொடுங்கழிந்துபோனான்
அனையவன்மைந்தர்யாங்களென்றுமற்றனைத்துங்கூறப்
புனல்விழிபொழியவிம்மிப்பொருமினான்புல்லினானே. (௭௯)

வேறு.

மற்றையமகனையுந்தருதிர்வல்லென
வுற்றவருணர்ந்துமுனொல்லையுய்த்தனர்
பெற்றவான்றவத்தினிற்பெற்றமக்களைப்
பொற்றடந்தோண்மிசைபொருந்தப்புல்லினான். (௮0)

சாந்தணிபுயத்துறத்தழுவித்தாழ்விலா
தேந்தெழிற்குரங்கின்மேலிருத்தியுச்சியை
மோந்தனன்முகத்தொடுமுகங்கள்சேர்த்தியுட்
கூர்ந்தபேரன்பினைக்குணிக்கற்பாலதோ. (௮௧)

மக்களோரிருவருமார்பிரண்டிற்குந்
தக்கதோர்தருமமுந்தவமுந்தாழ்விலா
வக்கமாமணியிரண்டெனவுமையன்மாட்
டொக்கவீற்றிருந்தனருலகம்போற்றவே. (௮௨)

வாகைவேலவரவன்மகாருமன்னவர்
தோகையுமிவன்மனையெனத்துணிந்தவந்
நாய்கனுமுள்ளமுநடுங்கநோக்கியே
சேகறுநூல்வலானிதனைச்செப்பினான். (௮௩)

அஞ்சலையஞ்சலையம்பலத்தியாம்
நெஞ்சலைவேளையினிலைநிறுத்தினாய்

எஞ்சலில்வினையினாலிதுவுஞ்செய்தனை
யுஞ்சனைபோதியென்றுரைக்கப்போயினான். (அச)

அங்கவன்போயபின்னவனியேழுமோர்
திங்களங்குடைநிழனிழற்றுஞ்செய்யவன்
வங்கவாரிதியிடையமுதின்வந்தபூங்
கொங்குதோய்குழலையுங்கொணர்திராலென்றான். (அரு)

எனவவனியம்பலுமேந்துபூந்தொடை
நனைவருகனங்குழனவ்வியன்னவர்
புனைகலன்றாசொடுமேந்திப்போயினார்
தினகரன்பொருமணிச்சிவிகைகொண்டரோ. (அசு)

பூங்குழன்மகளிர்தங்கணமும்போர்மதத்
தோங்கனேர்வீரருமொல்லையேகியே
வீங்கியகளிப்பினன்விடுத்தவாறெலாம்
ஆங்குறைகாவலர்க்கறைந்திட்டாரரோ. (அஎ)

அம்மொழியம்மகட்கறியக்கூறியே
யிம்மணிச்சிவிகைமேலிவர்தியென்றலு
மைம்மலர்க்கூந்தலம்மாற்றமாற்றியே
செம்மலர்ப்பதத்துணைசேப்பச்சென்றனள். (அஅ)

தேம்பயிறாமரையொன்றைச்செய்யவா
யாம்பலம்போதுசூழ்ந்தலர்ந்ததாமென
நோம்பணிமலரடிநூனுசுப்பினார்
தாம்பலர்சூழ்வரத்தையலேகினாள். (அகூ)

ஏகியதையலையெதிர்ந்துகாணவே
பாகியல்மொழியினார்பலருமீண்டினார்
ஓகையின்விம்மினாரும்பர்நாட்டிடை
யாகமோடெய்தினரனையபான்மையார். (கூ0)

மத்திரநாடெலாமகிழ்ந்துசூழவே
கொத்தலர்குழலினாள்புரிசைக்கோபுரத்
தத்திருவாயிலினகத்துறுமலே
யித்திருமொழியினையியம்பினாளரோ. (கூக)

அற்பினை நீங்கலாவாசைநீங்கிய
வெற்பினையுலகெலாமென்சொலாதரோ
பொற்பினைத்தாங்குபூம்பொன்னனார்முனங்
கற்பினைச்சிறிதியான்காட்டவேண்டுமால். (௯௨)

ஆதலாற்குண்டமொன்றகழ்திரங்கியும்
போதவேமூட்டுதிர்புரவலன்றனக்
கோதுதிர்மக்களுக்குரைத்திராலெனப்
பாதலத்தாழ்வுறப்பயமொன்றாக்கினார். (௯௩)

ஆக்கியகுழியிடையாரமோடகில்
தேக்கிவைமுதலவிந்தனங்கள்சேர்த்தினார்
காக்கருங்கடுங்கனல்கதுவமூட்டினார்
தூக்கியவெண்ணெய்நெய்சொரிந்திட்டாரரோ. (௯௪)

அவ்வழற்கொழுந்துவிண்ணளந்து நீண்டமை
................................வெண்ணிலாவதோ
கைவளைக்கண்ணனுமயனுங்காணவோர்
செவ்வழற்பிழம்பெழுந்தெனச்சிறந்ததே. (௯௫)

பார்த்தனர்யாவரும்பரந்ததீயினால்
வேர்த்தனருடனமனமெழுகுபோன்றனர்
தார்த்தடம்புயத்தினான்றானுஞ்சஞ்சலங்
கோத்தனன்மைந்தருநடுக்கங்கொள்ளவே. (௯௬)

முற்றெரிமருங்கினின்முறந்தவாணைகைப்
பொற்றொடியெய்திநீர்போதுதூவிமுச்
சுற்றுறவந்துகைதொழுதுமூழ்கினாள்
மற்றையக்குண்டநீர்வாவியானதே. (௯௭)

சீதவான்றடாகமுஞ்சிவந்ததாமரைப்
போதுமாம்புனலிடைமூழ்கிப்பொங்கினாள்
தாதுலாமலரிடைதடங்கடற்புனன்
மீதெழுந்திருமகளெனவிளங்கியே. (௯௮)

வேறு.

வானமங்கையர்மங்கலம்பாடிநின்றார்த்தார்
சோனைமாரியின்மலர்மழையமரர்கள்சொரிந்தார்

ஞானநான்மறையந்தணாசிகணவின்றார்
ஏனையோரெலாமருந்ததியெனவிறைஞ்சினரால். (௯௯)

மூட்டுதீயிடைமூழ்கிநின்றெழுந்ததைதமும்மை
நாட்டுளோர்களுநம்வியப்புறலென்னைகொனன்மை
காட்டுகின்றமெய்க்கற்பெனுமருந்துளோர்கடைநாள்
வீட்டுகின்றவான்றழலினுமூழ்கிமீள்குவரால். (௧௦௦)

ஏழொடேழுலகங்களுமெரிந்திடுந்தழல்வாய்ச்
சூழும்வார்சடைவிரித்துநின்றாடுமுத்தொழிலோன்
வாழிமேனிசெம்பாதியுங்கரந்தவள்வதிதல்
தாழ்விலாப்பெருங்கற்பினாலன்றுகொல்சாற்றில். (௧௦௧)

பஞ்சுறுத்துசெம்பதயுகப்பல்லவக்கொடியை
நஞ்சுறுத்துகணங்கையர்செங்கைகள்கொடுத்துச்
செஞ்சுடர்க்கொழுந்தெழுமணிக்குயிற்றிவான்றிரைவாய்த்
துஞ்சுமுத்தணிசிவிகையிற்றாங்கினர்தோண்மேல். (௧௦௨)

மானவேற்கரத்திரிகர்த்தனுயிர்த்தபூமயிலும்
தேனறாமலர்நாற்றியசிவிகையிற்செல்ல
வேனிலானிகர்மைந்தர்கள்பானிறமேனித்
தானைக்கருங்கலினவாம்புரவியிற்றொடர. (௧௦௩)

கரைசெயாமதக்கவுட்புகர்முகச்சிறுகட்கார்
புரைசெய்வாரணப்பிடர்மிசைபொன்னகர்புரக்கு
மாசனுமெனவரசர்கள்சூழ்வரவரசன்
றிரைசெய்வாரியினெழுமடங்குவகையிற்சிறக்க. (௧௦௪)

முருடுதுந்துபிசச்சரிபதலிகைமொந்தை
கரடிகைத்திரிகைப்பணையொருபுடைகறங்கச்
சுரிவளைக்குலமுதலியவொருபுடைதுவைப்பப்
பருகுதேனிசையாழிசையொருபுடைபம்ப. (௧௦௫)

சுகிர்த்ததண்ணுமையிலிற்றிடவழங்கியசுருதி
மிகுத்ததாளத்தின்கட்டளைவிடாதுநின்றிசைப்ப
வகுத்தபாலிடைத்தேனெனுமொழிச்சியரொருபால்
பகுத்தபண்ணிசையேழொடும்பாடிநின்றாட. (௧௦௬)

மாகடற்படுமமுதிடைதோன்றியவனசத்
தோகையொப்பதோர்சுந்தரப்புலோமசைதன்னை
நாகநாட்டிடைமணம்புரிந்துலாவியல்கண்ணும்
பாகசாதனனுமெனவீதிவாய்ப்படர்ந்து. (௧௦௭)

இருபிறப்பினான்றதூயீர்ம்புனலிறைக்குங்
குருமணிக்கலசம்பலகோடிகொண்டெதிரச்
சுரிகுழற்பணைமுலைச்சியர்கையினீர்சுழற்றப்
புரவலர்க்கிறைமனையொடுமனையகம்புக்கான். (௧௦௮)

பொழிந்தபொன்மழைநென்மழைபூமழைபுனலும்
எழுந்தநல்லறந்தன்னணிக்கொடிபடர்ந்தெங்கும்
விழுந்ததீவினைவிண்ணவர்க்கருத்தினவேள்வி
தழைந்தகற்பகநாடெனப்பொலிந்தபூதலமே. (௧௦௯)

வேறு.

காந்திமதியுநிலமகளுங்கமலக்கொடியுந்தணவாம
லேந்துபுயத்துமணிமருமத்திடையுந்திளைப்பவிகலாழி
யாய்ந்துநடத்துங்கருணைமுகிலனையானிவனேயெனவினிய
சாந்தகுணமாங்குடைநிழற்றித்தனிக்கோலோச்சிவீற்றிருந்தான். ()

வேறு.

புந்திதன்புதல்வனும்புரூரவாக்கதை
சிந்தைகூர்ந்துரைத்தவர்செவியிற்கேட்டவர்
தந்தமில்லகமிகத்தழைத்துவாழ்ந்துபின்
னிந்திரன்பீடமேலினிதுமேவுவார். (௧௧௧)

வேறு.

மூன்றுகண்ணனுக்குச்சூலமுளரிக்கண்ணனுக்குநேமி
யென்றவாயிரங்கண்ணனுக்கிலகுவச்சிரமிம்மூன்றுந்
தோன்றினன்றன்னைமுன்னாட்கடைந்தருள்தொழில்வல்லாளன்
போன்றவேலாயுதன்சொற்புகழையம்பெருமாள்சொன்னான். (௧௧௨)

தேவிசேர்படலம் முற்றும்.

புரூரவசரிதை முற்றிற்று.

உதவிப்பத்திராதிபர்.

உ

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உருசு-ம்பக்கத் தொடர்ச்சி]

[சூரியன், தன் வழித்தோன்றலான தசரதன் உயிர் ஒடுங்கும்படி கொடுமைசெய்த கைகேசியின்மீது கோபங்கொண்டு சிவந்தான்போலச் சிவந்து தோன்றினான். தோன்றவே, மகாதேவன் பிடித்த வில்லை ஒடித்த பேராண்மைபடைத்த சீராமன் முடிசூடும் திருவிழாவைக் காணலா மெனும் ஆசை வளர்தலாற் பொலிவுற்ற மாதர்முகம்போலத் தாமரைகள் மலர்ந்தன. இந்நாள் இராமன் முடிசூடும்நாளென்று அயோத்திநகரத்தாரனைவரும் சமுத்திரம் முழங்கியெழுதல்போலக் களிப்புமுழக்கஞ்செய்தெழுந்து பெருங்கூட்டமாகக் கூடினார்கள்.]

248. மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வதிட்ட னொத்தார்; வேறுள மகளி ரெல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள் திருவினை ஒத்தாள்; அவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாம் தசரதன் தன்னை ஒத்தார்.

இ - ள். ‘அப்படிக்கூடிய) அந்தநகரத்து (ஆண்மக்களுள்,-இராமனுக்கு இளையோராயுள்ளா ரெல்லாரும் அவன் முடிசூடுதலையெண்ணி, மகிழ்தலிலே, அவன் தம்பிமாரை ஒத்தார்கள்; அந்த மகிழ்வில் மூத்தோரான சாந்தசீலமுடைய மாந்தரெல்லாரும் தசரதனை ஒத்தார்கள்; மறையோர் (எல்லாரும்) வசிட்டனை ஒத்தார்கள்: பெண்மக்களுள், கற்பில் மேம்பட்டவர்கள் (எல்லாரும் கோசலையை ஒத்தார்கள்; மற்றைய மாதரெல்லாரும் சீதையை ஒத்தார்கள்; சீதை இலக்குமிதேவியை ஒத்தாள்.

கோசலைமனத்தை ஒத்தார் - (தாயாகிய) கோசலையின்மனத்தினை ஒத்த மனத்தினரானார். வதிட்டன் - வசிட்டன். சாது - சாந்தம் ‘சங்க அகராதி). கை - ஒழுக்கம் ‘புறப்பொருள்வெண்பாமாலை) - சீலம். சாதுகை மாந்தர்—சாந்தசீலமுடைய மனிதர்.

உரையில், இளையோர் இராமன் தம்பியரை ஒத்தாரென்றது, இப் பாட்டுக்கு முந்தியபாட்டின் கருத்து. 'சாதுகைமாந்தர்' என்பதன் பொருள்பற்றிப் பலவித்துவான்கள் தம்முள் மாறுபட்டுப் பலவாறு விரிவாகக் கூறியிருப்பது சிலகாலத்துக்குமுன் வெளிப்பட்ட 'செந்தமிழ்'ச் சஞ்சிகைகளிற் காணலாம்.

இராமன் முடிசூடுதல் இராசலக்ஷ்மியை மணத்தலாதலால், அந்த மணத்தால் அவ் விராசலக்ஷ்மி மகிழ்தல்போலச் சீதை மகிழ்ந்தாளென்பார் 'அன்னாள் திருவினை ஒத்தாள்' என்றார். "அற்புதன் திருவைச்சேரும் அருமணம்" என இராமன் முடிசூடுதலை இப்படலம் எகூ-ம் பாட்டிற் கூறுதல் காண்க.

[தங்கள்தங்கள் நாடுகள் சனங்களின்றி வெறுமைபாகப் பலதேசத்தரசர்கள், தத்தம் பரிசனங்கள் தொடர, அமிழ்தம் உண்ணத் திரளும் தேவர்கள்போல, இராமன் முடிசூடலைக் காணத் திரண்டுவந்தார்கள்.]

249. பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பாவை அல்குற்
றோகையர் குழாமும் மைந்தர் சும்மையும், துவன்றி எங்கும்
ஏகுமின் ஏகும் என்றென் றிடையிடை நிற்ற லல்லால்,
போகில, மீள கில்லா, பொன்னகர் வீதி யெல்லாம்.

இ - ள். தெருக்களெல்லாவற்றிலும் மாதர்கூட்டமும் மைந்தர் கூட்டமும் எங்கும் நெருங்கி, (அதனால் புடைபெயர இடமில்லாமல்) "போங்கள், போங்கள்" என்று சொல்லிக்கொண்டு இடையிடையே நிற்றலல்லாமல் செல்லவுமாட்டில, திரும்பவுமாட்டிலவாயின. (சனநெருக்கத்தால் போக்குவரவில்லை யென்றபடி).

பாகு - வெல்லப்பாகு. இயலல் - பொருந்தல். பாகு இயல் பவளம் செவ்வாய் - வெல்லப்பாகு (போலும் ஊறல்) பொருந்திய பவளம் (உண்டாயின் அது) போலும் செவ்வாய். பணைத்தல் - பருத்தல். சும்மை— கூட்டம். துவன்றி - நெருங்கி. குழாமும் சும்மையும் போகில மீள கில்லா எனக் கூட்டுக.

250. வேந்தரே பெரிதென் பாரும், வீரரே பெரிதென் பாரும்,
மாந்தரே பெரிதென் பாரும், மகளிரே பெரிதென் பாரும்,
போந்ததே பெரிதென் பாரும், புகுவதே பெரிதென் பாரும்
தேர்ந்ததே, தேரின் ; அல்லால் யாவரே தெரியக் கண்டார்.

இ - ள். (இராமன் முடிசூடுதலைக் காணு நற்குற்ற கூட்டங்களில்) வேந்தர்கூட்டமே அதிகமென்று சொல்வா(ர் சில)ரும், (அவரோடுவந்த) வீரர்கூட்டமே மிகுதியென்று சொல்வா(ர் வேறுசில)ரும், ஆடவர் கூட்டமே அதிகமென்று சொல்வா(ர் மற்றுஞ்சில)ரும், பெண்கள்கூட்டமே பெரிதென்று சொல்வா(ர் பின்னுஞ் சில)ரும், வந்தகூட்டமே அதிகமென்று சொல்வா(ர் இன்னும்சில)ரும, வரப்போகிறகூட்டமே அதிகமென்று சொல்வா(ர் பெயர்த்தும சில)ரும் (ஆகியவர்கள், தாம கண்ட கூட்டத்தை உள்ளபடி) அறிந்தாரானால், (அறிந்தது, அவர்கள்) அறிந்த அளவே; அல்லாமல் (முழுவதுமன்று: முழுவதும்) அறிந்து கொள்ளும்படி (முழுவதையும்) பார்த்தவர் யாவர்? (ஒருவருமிலர்).

வேந்தர் வீரர் முதலியவை ஆகுபெயர்களாய் அவ் வவ்வினத்தின் கூட்டத்தைக் குறித்தன. போநதது-வந்தது-வந்தகூட்டம். தேரின் தேர்ந்ததே யென மாற்றுக.

[சந்திரர் பலரென்றுசொல்லும்படி வெண்கொற்றக்குடைகள் விளங்க, பலபல அன்னங்கள் திரண்டாற்போலச் சாமரைகள் நெருங்க, இந்திரர் எண்ணிறந்தவரெனனுமபடி இராசரெல்லாம் முடிசூட்டுமண்டபத்தை அடைந்தார்கள்.

தங்கள் தங்கள் தலைமகன் திருமணத்தைச் சிறப்பிப்பார்போல, இராமன பூமிதேவியை மணக்கும் மங்கலவிழாவைச் சிறப்பிக்க, மறையவரெல்லாம் வநதார்கள்.

அந்த விழாவைக் காணவந்த மண்ணவர்நெருங்கி மண்ணை நிறைத்தார்கள்; விண்ணவர் திரண்டு விண்ணை நிறைத்தார்கள்; மங்கலச் சங்கங்களும் முரசுகளும் முழங்கி எல்லாருடைய காதுகளையும் நிறைத்தன ; எல்லாரும் வாரியிறைத்த பொன்மழைகள் விண்ணையும் மண்ணையும் கடலையும் நிறைத்தன.

மன்னர்களின் உடலொளிகள் விளக்கொளிகளை மறைத்தன. அவர்கள் மகுட ஒளி வானசோதிகளை மறைத்தன. மாதர்களின் ஆபரண ஒளி இமையாத் தேவர் கண்களை இமைக்கச்செய்து மறைத்தன.

வசிட்டன் முடிசூட்டுக்கு வேண்டிய மங்கலப்பொருள்களுடன் வந்தான். அபிடேகத்துக்கு உரிய புண்ணியதீர்த்த நீர்கள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. சிங்காதனம் அலங்கரிக்கப்பெற்றது. சோதிடர் முகூர்த்தசமயம் நெருங்கியதெனத் தெரிவிக்க, வசிட்டன் தசரதனை அழைத்துவரும்படி சுமந்திரனை ஏவ, அவன் சென்று அரச மாளிகையில் தசரதனைக் காணானாய்க், கைகேயி மாளிகையி னுள்ளானென்று கேட்டறிந்து, அங்கேபோய், மாதர்பாற் சொல்லிஅனுப்பக், கைகேயி வந்து 'இராமனைக் கூட்டிவருக' என்றாள்.

சுமந்திரன் இராமனை அடைந்து 'கைகேயி அன்னை உன்னை வரச் சொன்னாள். மகுடம் சூட வருவாயாக' என்றான். உடனே இராமன் மன்னர் திரண்டு தொடர்ந்துவரத் தேரேறிச் சென்றான்.]

251\. திருமணி மகுடம் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரின் ஒருவர் முந்தக், காதலோ டுவகை உந்த,
இருகையும் இரைத்து மொய்த்தார், இன்உயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருவரும் தேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார் போல்வார்.

இ - ள். (அயோத்திநகர மாந்தர்கள்) இராமன் அழகிய மணிமுடி அணிதற்குச் செல்கின்றானென்று (அதனைக் காண எழுந்த) ஆசையும் (அவ் ஆசை நிறைவேறுமென்னும்) மகிழ்ச்சியும் (பிடித்துத்) தள்ள, ஒருவர்க்கொருவர் முற்பட (விரைந்துசெல்ல அவனுக்கு) இருபக்கமும் (களிப்பு)முழக்கஞ்செய்து நெருங்கினார்கள்; இனிமையான உயிர், எல்லார்க்கும் (பலவாய் உடம்புகளுக்குள்ளே யிருந்த தன்மைநீங்கி) ஒன்றாகி உடம்புக்கு வெளியே) ஒப்பற்ற தேர்மீது செல்லக்கண்டாரொத்தார்கள்.

உந்தல் - தள்ளல் கை - பக்கம் (ஐங்குறுநூறு). இருகையும் - (இராமனுக்கு வலமும் இடமுமான) இருபக்கமும்.

சனங்கள் தங்கள் உயிர்போல இராமனை நேசித்தார்களென்பது கருத்து. அதை விளக்கிக் கூறியிருக்கிற கவித்துவமுறை கழிபெருங் களி விளைப்பதாயுள்ளது.

[இராமன் கைகேயி சொற்படி காட்டுக்குச் செல்லும் முன், மாதர் தோள்களாகிய மூங்கிற்காட்டூடே செல்வான்போல, அம் மாதர்கூட்டம் மொய்த்துச் சூழச் சென்றான். இராமனை உபசரிக்கப் பொற்சுண்ணமும் பூவும் சந்தனக்குழம்பும் சிந்தவந்த மாதர் வளையும் உடையும் நாணும் சிந்தினார்கள்].

252. "அங்கணன் அவனி காத்தற் காம் இவன் என்ன லாமோ
நங்கண் அன் பிலன்" என் றுள்ளம் தள்ளுற நடுங்கி நைவார்,
"செங்கணும் கரிய கோல மேனியும் தேரும் ஆகி
எங்கணும் தோன்று கின்றான்; எனைவரோ இராமன்" என்பார்.

இ - ள். "அழகிய கண்ணுளனாகிய இவன் பூமியைக் காக்கத் தக்கவனென்று சொல்லல் பொருந்துமோ, (பொருந்தாது; ஏனெனில்,) நம்மிடத்து அன்பில்லானா(ய் நம்மைக் காவானா)யிருக்கின்றான்" என்று மனம் தடுமாற நடுங்கி நைவார் (ஆன மாதர்சிலர்) "(இராமன்) சிவந்த கண்ணும் கரியதிருமேனியும் தேரும் உடையவனாகி எங்கு (ப் பார்த்தாலும் அங்கெல்லாம்) காணப்படுகின்றான். (ஆதலால்) இராமன் (ஒருவனாயில்லன்; இராமனாக உள்ளார்) எத்தனைபேரோ?" என்றார்கள்.

ஆம் - ஆவான் - தக்கவன். தள்ளல் - தடுமாறல் (சங்க அகராதி). கோலம் - அழகு. எனைவர் - எத்தனைபேர் (உ - ம். "நும் மனைவியர்தாம் எனைவர்". சிந்தா. கேமசரி. ௬௨ சங்க அகராதி.)

எனைவர் - எவர் (பெருங்கதை. 'தோன்றுகின்றார்' என்ற பாடங்கொண்டு, 'எனைவர்' என்பதன்பொருள் 'எவர்' என்று கொண்டால்) இறுதியடி, "(இராம உருவினர்) எங்கும் தோன்றுகின்றார்: (இவருள்) எவர் (உண்மை இராமன்" என்று சொல்வார்களென்னும் பொருளுடையதாம்.

மையல்மிகுந்த மாதர்கண்ணுக்கு இராமனது உருவம் எங்கும் தோன்றும் இயற்கை யுண்மைபற்றி இவ்வாறு நயம்படக்கூறினார்.

[மின்னோடு கூடி உலாவுகின்ற மேகம்போல, மார்பில் முந்நூல் இலங்கத, தேர்மீது செல்லுகின்ற இராமனைக்கண்டாரெல்லாரும் அவனை நோக்கி "உன்னால் இவ்வுலகம் துன்பத்தினின்று நீங்கிப் பிழைத்தது. ஊழிகாலம் வாழ்வையாக. எங்கள் ஆயுள்நாள்களெல்லாம் உனக்கே ஆகுக. உனக்கே எங்கள் நல்வினைகள் பயன்படுவனவாக. உன் விழிகளை நிகரத் தாமரையும் மேனியை நேர மேகமும் என்னபுண்ணியஞ்செய்தனவோ. எங்களை ஆள உன்னைத் தந்த தசாதனுக்கு யாங்கள் செய்யத்தக்க கைம்மாறு யாது! உன்னைக் காணுந்தோறும், அன்பன்றி வேறு காரணம் ஒன்றும் இன்றி, எங்கள் கண்கள் இன்பநீர் பொழிகின்றன" என்றார்கள்.

பலர் "இந்த மணிவடங்களையும் பொற்குவியல்களையும் குதிரைகளையும் யானைகளையும் ஏற்றுக்கொண்டு ஏழைகளுக்கு ஈவாயாக" என்று கொடுத்தார்கள். இவ்வாறு இராமனைக் கண்டவர்கள் செய்யாநிற்க, அவன்வருகையை எதிர்பார்த்திருந்தோர், அதனைச் சிறப்பிக்கத் தம் வாயிலின் எதிரே தெருவிலே பொன்னையும் மணியையும் பொழிந்து நின்றார்கள்.

"இவனை வளர்த்தவள் கோசலையன்று, கைகேசியே; அவளுக்கு இவன் மணிமுடிவனைவாலாம் மகிழ்ச்சி வார்த்தைக்கடங்காது. இனிப் பாவமும் துன்பமும் வேரற்றுப் பார்விட்டு விலகியொழிந்து விடும்; இவ்விராச்சியச்செல்வம் ஊருணிநீர்போல எல்லார்க்கும் பொதுவாம்" என்று சனங்கள் களிகூர்ந்து கூறுநிற்க, இராமன், கைகேயி, தசரதருடன் அரசமாளிகையிலிருந்து, தன்னை வரச்சொன்னானென்றெண்ணி, அங்கே சென்று, அவ்விருவரையுங் காணானாய்க் கைகேயி மாளிகையை அடைந்தான்.]

253. ஆயனை நிகழும் வேலை, அண்ணலும் அயர்ந்து தேறுத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி,
நாயகன் உரையான் வாயால் நான்இது பகர்வன் என்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

இ - ள். இராமன் (தசாதன் வழக்கமாக இருக்குமிடத்தில் இல்லாமையால் சிறிது) சோர்வுற்று (ப் பின்பு) தேறித் தசாதன் (வேறெங்

குள்ளானென்று அவன் அப்போது இருக்குமிடத்தைத் தேடிவருதலைக் கைகேசி) கண்டு, அரசன் ("பரதன் நாடாள்வான், நீ காடேகு" என்று) வாய்விட்டுச்சொல்லமாட்டான். இதனை நானே கூறுவேனென்று (தன்னைத் தாயென்று கருதுவான் எதிரே எமன்போலத் தனியளாய் வந்தாள்.

ஆயன - அத்தன்மையன (ஆனநிகழ்ச்சிகள்). வேலை - சமயம். அயர்ந்து - சோர்ந்து. தேறு - தேறி. தூயவன் - பரிசுத்தன்; தசரதனைக் குறித்தது. சூழல் - இடம். தமி - தனிமை.

உயிர்களுக்குத் தம்மை ஊட்டிவளர்க்கும் தாயினும்அருளுடையாரும், தம்மைக் கொன்றொழிக்கும் கூற்றுவனினும் கொடுமையுடையாரும் இல்லை. ஆதலால், தாய் கூற்றுவன்போலாதல் கொடுமையினும் கொடுமையாய் வியப்பினும் வியப்பாமென்பது புலப்படவும், இனிய மணமாலை கொடிய விடப்பாம்பாக மாறினாற்போலக் கைகேயியின் தூயமனம் தீய மனமாக மாறியுள்ள தன்மையை விளக்கவும் 'தாய் என நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்' என இனிது கூறினார்.

[இராமன், தன் முன்வந்த கைகேயியை, 'மேயப்போன தாயை மாலையில் வரக்கண்ட கன்றுபோலக், களிதுளும்பக் கண்டு, நெற்றி நிலத்திற்படிய வணங்கி யெழுந்து, மரியாதையாக வாய்புதைத்து, வத்திரத்தை மடக்கிக்கொண்டு பணிவாக நின்றான். அவனை நோக்கிக் 'கொன்றுழல் கூற்றமென்னும் பேரின்றிக் கொடுமைபூண்டாள், ஆகிய கைகேயி, "உன் தந்தை இன்று எனக்குச் சொன்னதும் நான் உனக்குச் சொல்வதும் ஆன ஒருசெய்தி உண்டு" என்று கூறினாள். அப்போது, இராமன், அவளை நோக்கி, "கட்டளையிட்டது என் தந்தையாக, அதனைத் தெரிவிப்பது என் தாயானால், நான் உய்தி அடைந்தேன். பிறந்ததனாலாய பயன் பெற்றார் என்போல எவருமிலர். யான் செய்த தவப்பயனை இன்று பெற்றேன். இதனினும் நன்மை வேறில்லை. எனக்குத் தந்தையும் தாயும் நீரே. கட்டளைப்படிசெய்யக் காத்திருக்கின்றேன். பணித்தருள்க" என்றான். அவள் " 'இந் நிலவுலகமுழுவதையும் பரதனே ஆள்வான். நீ சடைதரித்துத் தவம்பூண்டு காட்டில் வாழ்ந்து பதினான்கு ஆண்டுகழித்து வரவேண்டும்' என்பது அரசன் கட்டளை" என்றாள்.]

254 இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே, யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி, நோக்கில்,
ஒப்பதே, முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா!

இ - ள். யாவராலும் கூறுதற்கரிய குணங்களையுடைய இராம னது திருமுகப்பொலிவு, (அதனை நேராகப் பாராதவராகவும் நெடுங் காலம் கழிந்தபின் கேட்டல்மட்டும் உடையராகவும் உள்ள, எம்போலிய ரால் இக் காலத்திலே சொல்லுதற் கெளியதோ! (அக் காலத்தில் அந்த முகப்பொலிவைப் பலமுறைபார்க்கப் பாக்கியம் படைத்தவர்கள், அதன் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், (அவர்களுக்கு அது, "பரதன் நாடாள்வான், நீ காடேகு" என்று கைகேயி கூறிய வசனத்தைக்கேட்ட தற்கு) முன்னும் பின்னும் மலர்ந்த செந்தாமரை மலரை ஒத்திருந்தது; அவ் வசனத்தை (மனம்) உணரக் கேட்ட தற்சமயத்தில் (அம்மனம் கிளர்ச்சி அடைய, அது காரணமாக, அம்முகப்பொலிவு வீறுற்று அம்மலரை) வெற்றிகொண்டது. (இந்த அரியநிகழ்ச்சி) வியப்பானது.

எம்மனோர் - எம் அன்னோர் - எம்மைப்போன்றவர். எளிதே யென்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப்பொருட்டு. அப்பொழுது - தற் சமயத்தில். அம்மா - அதிசயச்சொல்.

திருமுகச் செவ்வி இயம்புதற்கெளிதே, நோக்கில், அலர்ந்த செந் தாமரையினை முன்பு பின்பு ஒப்பதே, அப்பொழுது வென்றதெனக் கூட்டுக.

இராமன் கைகேயி கூறியதைக் கேட்டற்கு முன்னும் பின்னும் அவன்முகம் தாமரைமலரை ஒத்திருந்தது; அவன் அவள்கூறியதைக் கேட்ட சமயத்தில் அவன் முகம் தாமரைமலரை வென்றதென்றதற் கியைய அடுத்த பாட்டில் 'உருளுடைச் சகடம்பூண்ட உடையவன் உய்த்த கார் ஏ - றருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்த தொத் தான்' எனவருதல் காண்க.

இப்பாட்டில் 'திருமுகச்செவ்வி நோக்கில், ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம்உணரக்கேட்ட-அப்பொழுதலர்ந்தசெந்தாமரையினைவென்ற தம்மா' என்ற பகுதிக்கு, முந்திய உரைகாரருள் ஒருவர் "திருமுகப் பொலிவைப் பார்க்கில், முன்பு தாமரைமலரை ஒத்திருந்தது, இந்த வார்த்தையைக் கேட்டபின்னர் அன்றலர்ந்த செந்தாமரைமலரை வெற்றி கொண்டது, அம்மா! இது ஓர் வியப்பு" எனவும், மற்றொருவர் "திருமுகத்தின் அழகினைப் பார்க்கில், முன்னும் பின்னும் அது தாமரை மலரினை உவமையிற் பொருந்துவதாயினும், அம்மொழியை அறியக் கேட்ட அப்பொழுது நாளலர்ந்த செந்தாமரைமலரை யொத்திருந்தது. இதனை, 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை—ஒத்திருந்த முகத்தினை' எனப் பிற்கூறுதலானும் அறிக" எனவும் உரை வரைந்துள்ளார்கள்.

இப் பகுதிக்குப் பின்வருமாறும் பொருள்கொள்ளலாம்:—

(ஆராய்ந்து) பார்த்தால், (இராமன்) திருமுகத்தழகு அன்றலர்ந்த செந்தாமரைமலரை ஒப்பதோ, (என்னின், அன்று, மற்றென்னெனின், 'பரதன் நாடாள்வான், நீ காடேகு' என்று கைகேயிகூறின)வசனத்தைக் கேட்ட அப்பொழுது (அதற்கு) முன்பு பின்பு (ஆகிய மூன்று காலத்திலும் அந்த மலர் ஒப்பாகாதபடி உயர்ந்து அதனை) வென்றது. இது வியப்பானது.

இப்பொருள்கொள்ளுங்கால், 'எளிதே' யென்பதில் உள்ள ஏகாரம் போல 'ஒப்பதே' என்பதிலுள்ள ஏகாரமும் எதிர்மறைப்பொருளுடையதாகக் கொள்ளுதலும் 'திருமுகச் செவ்வி, நோக்கில், அலர்ந்த செந்தாமரையினை ஒப்பதே வாசகம் கேட்ட அப்பொழுது முன்பு பின்பு வென்றது' எனக் கூட்டுதலும் வேண்டும்.

255. "மன்னவன் பணிஅன் றாகில் நும்பணி மறுப்ப னோ,என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ,
என்இனி உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்ஒளிர் கானம்இன்றே போகின்றேன்; விடையுங் கொண்டேன்."

இ - ள். (கைகேயி கூறியதைக்கேட்ட இராமன் அவளைநோக்கி,) "நீர் பணிப்பது அரசன் கட்டளையல்லவாயினும் (யான் அதனைச்செய்ய)

மறுப்பேனோ, என் தம்பி பாதன் பெற்றசெல்வம் அடியேன் பெற்றதல்லவா, (இக்கட்டளையைப்பெற்ற) பின்பு இனிமேல் (இக்கட்டளையினும் மேலானதாக அடையத்தக்க) நன்மை யாது? இக்கட்டளையை என் தலைமேற் சுமந்தேனாகி இன்றே காட்டுக்குப் போகின்றேன். (போம்படி உமது கட்டளை பெற்றதனால் உமது) விடையும் பெற்றுக்கொண்டேனானேன்" (என்றான்).

பணி - கட்டளை. என் - யாது? இனி - இதன்மேல். உறுதி - நன்மை. மின் ஒளிர் கானம் - (தன்மீது தங்கிய மேகத்தின்) மின் ஒளிசெய்கின்ற வனம்.

கைகேசி சூழ்வினைப்படலம் முற்றிற்று.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் நாளிது 1925-ஆ நடத்திய

பிரவேசபரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு

1-வது வகுப்பு.

நிர். ரி. நிர்

1. 34. மீ. முத்துச்சாமி, சன்மார்க்கசபை மாணவன், மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸமஸ்தானம்.

(முதற்பரிசு ரூ. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2. 31. உலகவூழியன், care of வேங்கடசாமிநாட்டார் அவர்கள், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி.

(இரண்டாவது பரிசு ரூ. 30).

2-வது வகுப்பு.

1. 35. சே. பழனிமுருகையன், இளங்காடு, திருக்காட்டுப்பள்ளி போஸ்டு, பூதலூர், S.I.R., தஞ்சாவூர் ஜில்லா.

2. 59. V. இராகவேந்திரராவ், V. M. School, இராஜவீதி, கோயம்புத்தூர்.

B. இராஜராஜேசுவரஸேதுபதி,

அக்கிராஸநாதிபதி, மதுரைத்தமிழ்ச்சங்கம்

உ

மேல்புலக் கல்விமுறைகள்.

II. மாண்டிஸோரி முறை.

[௩௭௫-ம் பக்கத் தொடர்ச்சி.]

VIII. பகுத்தறிவு.

கல்விக்கு முக்கியமான கருவியாகவும், சிறுவர்களின் சுயேச்சைக்குச் சாதனமாகவும் இருப்பது எதுவென ஆராய்வோமாஞல் அதுதான் பகுத்தறிவாகும். தம்செய்கைகளிற் சுருசுருப்பும் திறமையும், இந்திரியங்களை வளர்ப்பதற்குத்தக்க சக்தியும் உடைய சிறுவர் பகுத்தறிவுடையர் எனப்படுவர். ஆசிரியரிடம் ஒப்புவிக்கப்பட்ட ஒரு சிறுவனை அவருடைய பார்வையினின்று விடும்போது அவன் திறமையுடையவனுகவும், புத்திசாலியாகவும் நடந்துகொள்ளும்படி விடவேண்டும். அப்படி விடப்படுவானுஞல் அவன் ஏதாவது ஒருதொழிலைச் செய்துகொண்டேயிருப்பான். இப்படி இவன் நாளடைவில் ஒவ்வொன்றிலும் தேர்ச்சியடைந்து நல்லறிவுடையவனுவான். இதனுல் முன்பிரிவுகளிற் சொல்லப்பட்ட சிறுவர்களின் சுயேச்சையென்பது என்னவென்று பார்ப்போமாயின், அது அவர்களுடைய பகுத்தறிவைக் கண்டு, அவர்களை அவர்களிஷ்டப்படி நல்வழியில் நடக்கவிடுவதேயொழிய, மிருகத்தன்மையான இச்சைப்படி நடக்கவிடுவதென்று பொருள்படாது. ஆதலினுல், மக்களது சுயேச்சைக்குப் பகுத்தறிவும் ஒருகாரணமென்று தோன்றுகிறது.

முக்கியமாக மக்களது நிலையான உரிமைகள் எவையென ஆராய்வோமாயின், அவை, தடைப்படாததும் அடிமைப்படாததும் தன்னேற்றத்திற்குரியவைகளைத் தான் தேடும் சக்தியுடையதுமான நிலைமைகள் எனலாம். இவற்றைக் கல்வியொன்றினுற்ருன் பெறமுடியுமென்பது வெள்ளிடைவிலங்கலாம். இக்கல்வியாலேதான் ஆண்மகனின்பெருமையும் வளரவேண்டும். அதற்குப் பகுத்தறிவுவேண்டும். பகுத்தறிவு தேகவளர்ச்சியையும் அந்தக்கரணவளர்ச்சியையும் அளிப்பதுமாத்திரமன்றிப் பெருமையையும் தருகிறது.

இனிப் பகுத்தறிவென்பது என்னவென்று ஆராய்வோம். கல்வியிற் றேர்ந்த பெரியார்கூறும் விவரங்களைவிட்டுச் சாதாரணமக்கள்கூறுவது கொண்டுபார்க்க, இது பலவிடயங்களின் சேர்க்கை கூட்டுறவு பிரதி பலித்தல் முதலியவை உளத்தினிடம் பதிந்து, அவை மறுபடி பக்கத்தி லுள்ளவற்றோடு சம்பந்தப்படும்போது உண்டாவதொரு உணர்ச்சியாம். இன்னும் இதை ஆராய்வோம். பெயின் (BAIN) ஆசிரியர்கொள்கைப் படி ஒருபொருளினின்று மற்றொன்றைப் பிரித்துக்காணும் வித்தியாசமே அறிவின்முதற்றொழில்; அவ்வேறுபாடுகளை உளத்திற்கொள்ள ஆதாரமாக இருப்பது உணர்ச்சி; விடயங்களை மனதில் வாங்கி ஒன்றி னின்று மற்றொன்றைப் பிரித்தறிவது அறிவுத்தோற்றத்தின் முதல் வேலையாகும். இன்னும் இவற்றை விவரமாகச் சொல்வோமானால் இப் பகுத்தறிவு சாமர்த்தியம் என்பதோடு கலப்புடையது என்னலாம். இவையிரண்டும் ஒருவனைவினவிய வினாவுக்கு அவன் விடையிறுக்குங் காலத்தைப்பற்றி நிற்கும்.

ஒருபொருளைப் பார்த்தமாத்திரத்தில் அப்பொருளைப்பற்றிய விவரங்கள் மனத்திற்பதிய, ஆண்டு அப்பொருளைப்போன்றுள்ளவைகளை யும் ஆராய்ந்து, அது இன்னதெனப் பிறகு ஒரு தீர்மானத்துக்கு வருகிறோம். இதுதான் அறிவைப்பற்றிய வெளித்தோற்றம். இம்முடி வுக்கு ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகவருகிறானோ அவ்வள வுக்கவ்வளவு அவன் சமர்த்தன், அதிசாமர்த்தியன் என்று பல திறப் படப் பேசப்படுகிறான். இப்படியன்றி, ஒருகாரியத்தைச் சாதாரணமாக வும் சாவதானமாகவும் செய்து முடிக்கவோ அன்றி, ஒன்றை அறிந்து கொள்ளவோ அதிககாலம் செலவழிப்பவர்களை மந்தபுத்தியுடையவர்க ளென்போம். அதிசொற்பகாலத்தில் வெகுநுட்பமான பொருள்களை யும் அறிபவனைத் தீவிரதரபுத்தியுடையவனென்போம். [He understands in a flash]. இவைகளெல்லாம் ஒருவனுக்கு இயல்பாகவே யமையவேண்டும். மற்றொருவரால் புகட்டமுடியாதனவாம்.

நாம் நமது குழந்தைகளின் ஐம்பொறிகளையும் பழக்குவித்தலினால் அவர்கள் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முயலுகின்றனர். பொறிக ளும் அவற்றின் முயற்சிகளும் பிரிக்கப்படும் சமயமே ஒருகுழந்தை ஒரு விஷயத்தை மனதிற் கிரகிக்கிறது. நாம் நமது சிறுவர்களுக்கு

அவர் தாமாகப் பயலுமுறையைப் பழக்கிவிடுவோமானல் அதன்பயனுக அவர்கள், பிறருதவியின்றியும் தீவிரமாகவும் காரியங்களைச்செய்யமுற் படுவர். ஒரு குழந்தை தீவிரமாக ஒருகாரியத்தைச் செய்யுமாயின் அதன் அறிவு வெளிப்படுவதுடன் அந்தக்காரணமும் முறைப்படுகிறது. இப்படி உளம் ஒழுங்குபடுவதையே புத்திக்கூர்மையென்கிறோம். உளத்தில் ஒழுங்கு ஏற்பட்டாற்ருன் நாம் ஒரு காரியத்தை வெகுசீக்கிரமாய்ச் செய்துகாட்டமுடியும். ஒருவன் ஒன்றையும் சரியாக அறிந்துகொள்ளமுடியாமலிருக்கும்பொழுது அவனுக்கு விடயங்களை விவரமாக எடுத்துக்காட்டுவோமானல் அவனது உளம் ஒழுங்கடைந்து அவனது அறிவு அவனை ஒரு முடிவுக்குவரும்படிசெய்வதைக் காண்கிறோம். பிரித்தறியச் சாமர்த்தியமுடைமை யென்பதுதான் புத்திசாமர்த்திய மென்பர்.

ஆக்கல் என்பதையே ஒழுங்கின் விரிவு என்று கூறலாம். விவிலிய நூலில் (Bible) கடவுள் முதலிற் கலக்கத்தினின்று ஒழுங்கை நிலை நிறுத்தி அதன்பின் மற்றவற்றை ஒவ்வொன்ருகப் படைத்தாரென்று வாசிக்கிறோம். பைத்தியக்காரன் என்பவன் எவனெனை விசாரிப்போமாயின் அவன் அறிவுகலங்கியவன் என வெளியாகும். ஆகவே, அறிவு கலக்கமுற்றபோது ஒன்றும் தெளிவில்லாமல் திகைப்புண்டாகும். அவ்வாறே சிறுவர்களும் முதலில் எதையும் அறியுந்திறமுடையவராயிருப்பதில்லை. அவர்க்குக் காலங்கொடுத்து ஒவ்வொரு பொருளாக அறியச்செய்வோமாயின், அவர்கள் மனதில் அப்பொருள்களைப் பதித்துக் கொள்ள இடமுண்டாகும். அப்படியனறிப் பலபொருள்களையும் ஒரே சமயத்திற் காணச்செய்வோமாயின், அவையெல்லாம் ஏககாலத்தில் மனத் திற்பதிய அவற்றுள் ஒன்றையும் முற்றப்பற்றுதலின்றித் தலைசுழலச் சிறுவர்கள் அழத்தொடங்குவர்; அல்லது உறங்கத்தொடங்குவர். ஆதலால், பொறிப்பயிற்சிமுறையாற் சிறுவர்கள் பொருள்களைப் பிரித்தறியவும் வரிசைப்படுத்தவும் கற்பிக்கவேண்டுவது அவசியமாகும்.

பொருட்பயிற்சிமுறை, பொருள்களைப் பாகுபடுத்தி அவற்றின் குணங்கள் இவையெனக்காட்டும்; அளவு, உரு, வன்னம், உணர்ச்சி, நிறை, தட்பம் வெப்பம் முதலியவற்றையெல்லாம் எடுத்துப்புகட்டும்; பொருள்கள் முறையாக அமைக்கப்பட்டிருக்கும். முதலிற் குழந்தை

கள் பலவிதப்பயிற்சியால், இரண்டு பொருள்களை ஒப்புநோக்கப்பழகுகின்றன. அதனால், அவ்விரண்டில் ஒவ்வொன்றிலுமுள்ள வேற்றுமையைக் காண்கின்றன. இவ்வாறு படிப்படியாக ஒவ்வொன்றிலுமுள்ள வித்தியாசத்தைக்காண, உபாத்தியாயர் அப்பொருள்களுக்கு ஒவ்வொரு பெயரை இடுகின்றனர். அதனைக் குழந்தைகள் கற்கின்றன. இப்படிப் பலபெயரைக் கற்று அவைகளை உளத்திற்பதிக்கின்றன. இவ்விதமாக அவைகள் நிறைவுறவே, ஒருபொருளை யொருவன் சொன்னவுடன் சிறுவர்கள் அப்பொருளையும் அதன் உரு முதலானவைகளையும் உளக்கண்ணாடியிற் காண்கின்றனர்.

இப்படி உளத்தில் வரிசைப்படுத்திவைப்பதற்குத்தான் அறிவும் கல்வியும் என்று பெயரிடுகிறோம். ஒருவன் ஒருநூலை வாசிக்கையில் அல்லது ஒரு பாட்டைக்கேட்கையில் அது இன்னார்வாக்கென்பானாயின் அவனை மெத்தப்படித்தவனென்போம். அவன் அவ்வாசிரியனுடைய எல்லா நூல்களையும் படித்திருப்பதால் அவைகளிற்சில அவன் உளத்திற் பதிந்திருக்கின்றன; அந்த நடைப்போக்கைக்கொண்டு அந்த நூலாசிரியன் இன்னானென்று கூறுகிறான். அதனால் அவனது உளத்தில் ஒருவித ஒழுங்கு உண்டாயிருக்கிறது. அதுபோலவேதான் சிறுவர்களின் கல்விமுறையும் உள்ளது.

இந்நாளில் 'ஆப்ஜெக்டிவ் மெதேடு' என்னும் உவமானவிளக்க வழியாலே பிள்ளைகளின் அறிவை விர்த்திசெய்ய வழியில்லை; ஒரு பொருளைக்காட்டி, அது இன்ன உருவும் நிறமும் உடையதென்றும், இன்ன இடத்திற் கிடைக்குமென்றும், அதன் பிரயோஜனம் இன்னதென்றும் கூறிக்கொண்டேபோவோமானால் அதனாற் குழந்தைகளின் அறிவு விருத்தியாக இடமில்லை; ஆயினும், சிறுவர்கள் பொருள்களின் வகை குணம் முதலியவைகளைக் காட்டிய அளவில் அறிந்துகொள்ள இது கருவியாகும். இம்முறையால் அந்தக்காரணங்களுக்கு வேலையின்மையால், சிறுவர்கள் ஒருபயனையும் அடைவதில்லை. இதற்கு மாறாகச் சிறுவர்களிடம் சில பொருள்களையளித்து, அப்பொருள்களின் ஒற்றுமை வேற்றுமைகளைச் சொல்லும்படிசெய்து, அவர்க்குத் தெரியாதவற்றைமட்டும் நாம் விளக்கிக்காட்டலாம். இப்படிச்செய்வதால், சிறுவர்களின் உள்ளம் விசாலமாயும், அறிவுக்களஞ்சியமாயும் விளங்கும்.

ஆயினும், இதனால், 'சிறுவர்களையெல்லாம் முற்றறிவுடையவர்களாகச் செய்துவிடலாம் என்று சொல்லமுடியாது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோரளவுண்டு. முற்றறிவுடையவர் கடவுளொருவரே. அவரே களைப்பின்றிச் சலிப்பின்றி எல்லாவற்றையும் பார்க்கவும் செய்யவும் வல்லவர். நாம் சிற்றறிவுடைமையால் எல்லாவற்றையும் அறிவது இயலாததாகின்றது. அன்றியும், விருப்பு வெறுப்பு என்பன இருக்கின்றனவல்லவா? அதனால் நமது பொறிகளும் அவற்றுக்கு விருப்பமானவற்றைமட்டும் கிரஹிக்கின்றன. மற்றவற்றைக் கிரஹிப்பதில்லை. கண் ஒளியையும் செவி ஒலியையும் கிரஹிக்கும். இவற்றால் மற்றவைகளைக் கிரஹிக்க இயலாது. கடவுளைப்போல முற்றறிவு நமக்கு இல்லையாயினும் இவைகளைச் சேர்த்தறியுந்தன்மை நம் மனத்துக்குண்டு; அறிவு, கவனத்தாலும் அந்தக்கரணவலுவாலும் பொருள்களைக் கூர்ந்து பார்த்து அவற்றின் உத்தமகுணங்களைப் பகுத்தெடுத்து, அவற்றோடொத்த பொருள்களைச் சீர்தூக்கி உளத்தின்பாற் சேர்க்கிறது. அவசியமில்லாதவைகளை அறிவு கவனிப்பதில்லை; அவற்றை நீக்கியேவிடுகிறது.

உற்சாகமும் ஐயுறவும், நாளடைவிற் சீர்ப்பட்டுப் பழக்கங்களாகி முடிவில் ஒரு தீர்மானத்துக்குவர அது உளவலி என்று பெயர்பெற்றதுபோல, பொருள்களின் கூட்டுறவிலும் தேர்ந்தெடுப்பிலும் புகுந்து அவற்றில் தள்ளவேண்டியவற்றைத் தள்ளிக் கொள்ளவேண்டியவற்றைக் கொள்ளும் அறிவே பகுத்தறிவென்று சொல்லப்படும். சாதாரணமாக உளத்துக்குப் பகுத்தறிவேற்படுதல் இயற்கை. ஆயினும், அறிதலும் கற்றலும் வேறுவேறாகும். கற்றல் என்பது பிறர் சொல்வதைக்கேட்டுத் தெளிதல்; அறிதல் என்பது ஒரு பொருள் இப்படிப்பட்டதென உளத்தே உருவகப்படுத்தல்; ஆகையால் அறிதலுக்கும் கற்றலுக்கும் அதிக வித்தியாசமுண்டென்பது விளங்கும்.

இனி, இப்பகுத்தறிவின் முற்பகுதியான அறிதல் அல்லது தெளிதல், ஈசுரனிடத்திற் பற்றுடையதாய் ஆன்மலாபப்பேற்றின்வழிச் செல்லுமாயின் மிக்கசிறப்புடையதாகும். அப்படிச்செல்வது மிக அரிது. ஆனால், சிறுவர்கள் தமது பகுத்தறிவால் ஏதாவது ஒருபொருளின் தன்மையையேனும் அல்லது ஒரு புதிய விடயத்தையேனும் காணுவ

ராயின் அவரடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. இவ்விதமாக நூதனப் பொருள்களில் அறிவு செல்லச்செல்லச் சிறுவர்கள், தின்பண்டங்கள் பொம்மைவிளையாட்டு முதலியவைகளை அறவே மறந்துவிடுகின்றனர். மற்றவைகளைக் காணும்போதுண்டாகும் வியப்புக்கு அளவேயில்லை. சிறுவர்களுக்கு இவ்வழியால் உற்சாகமூட்டுவது நமது கடமை. அவ் வாறின்றித் தடுப்போமாயின், சிறுவர்கள் அறிவுமுதிர்ச்சியடையாது தடுத்தவராவோம்.

பாசபந்தத்தினின்று நீங்கியவர்களின் தன்மைமுழுவதும் சிறுவர்க ளிடத்துங் காணலாம். பந்தத்தினின்று நீங்குவது சன்னியாசிகளுக் குத் தான் இயலும். அவர்களால் கடவுளைத் தியானிக்கமுடியும். அவ் வாறு சிறுவர்கட்கும் இயலும். மற்றையோர்க்கு அது எளிதின் முடி யக்கூடிய காரியமன்று. ஆயினும், பெரியோர்பலர் நூதனமானவற்றை யறிந்தவண்ணம் எவ்வாறெனை ஆராய்வோமாயின், அவர் ஒவ்வொரு பொருளையும் உற்றுப்பார்த்து நுட்பமாக ஆராய்ந்து அவைகளைத் தியா னித்து இவை இப்படித்தான் உண்டாவது எனத் தம் மனத்தே தோற்றமாவதை நம்பி அதனிற் பற்றுவைத்து அறிந்து வெளியிட்டன ரென்பது விளங்கும். இவ்விதமே கொலம்பஸ், பப்பேன், நியூட்டன், ராஸ், உல்ப் (Wolf)முதலானவர்கள் பல செயற்கருஞ்செயல்புரிந்தமை அவர் சரிதங்களை ஊன்றி வாசிப்பவர்க்குப் புலனாகும். இவைகட்கெல் லாம் நம்பிக்கையும் பற்றும் அவசியம். இவை சிறுவரிடத்து அதிக மாய் அமைந்துள்ளன. அவற்றை அருகிப்போகவிடாது மேலும் மேலும் ஓங்கி வளரும்படிசெய்வது நமது முக்கிய கடமையாகும்.

[தொடரும்]

திருவாரூர்—இலக்கணவிளக்க பரம்பரை

சோமசுந்தரதேசிகர்.

இராஜராஜதேவருலா.

[௩௯௪-ம் பக்கத்தொடர்ச்சி.]

[மடந்தை.]

229. வாரி படுமமுதை யொப்பாள் மதுகாஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்

230. தட்டுஞ் சிறுகப் பெருகு மரகதத்திற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டுந்

231. துகிலுங் காப்பச் சுடர்பரப்பிக் கைபோய்
அகல்கின்ற வல்குல் அரிவை—யிகலி

232. [1]யொருத்தி மருங்குல்கடிந் தோன்றினவர் [2]தொன்றி
நெருக்கிய [3]பைய நிரம்பித்—தருக்கி

233. யிடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—[4]தடங்கொ

234. டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்

235. பெருமை யுவமை பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னம்—கருமை

236. யெறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு—மறித்து

237. மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—ததைத்துக்

238. கழுநீ ரிதழின் கவினழித்து மானின்
[5]விழிநீர்மை வாய்த்த விழியாள்—முழுதும்

239. [6]நெறித்துக் கடைசுழன்று நெய்த்திருண்டு நீண்டு
[7]செறித்துப் பெருமுருகு தேக்கி—[8]நிறுத்துணம

---

[1]யொருக்கி. [2]தொன்று. [3]மாமை. [4]தடங்கொண். [5]விழுநீர்மை. [6]நெறிந்து கடை குழன்று. [7]செறிந்து. [8]நறுந்துணர்.

240. வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் [1]மாந்தளிரைச்
[2]சோர்ந்து பிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்துநிற்ப
* * * * *

241. நதிக்கு மலைக்கு மடவிக்கு நாளுங்
குதிக்கு மதச்சுவடு கோத்து—மதிக்கும்

242. பிடிவிடாக் காதற் பெருங்களிறுங் கன்றும்
அடிவிடா தவ்வா றடையப்—படிவிடா

243. தாட்டுங் கரிவாரி யேழென்பா ரெட்டென்னக்
கூட்டும் பெருங்கடவுட் கொல்யானை—நீட்டிற்

244. பணிகொண்ட பூதப் படைநான்கும் [3]பற்றப்
[4]பணிகொண்ட பௌவம் [5]பரக்கப்—பணிகொண்ட

245. கார்முற்றும் பேரணி வீழ்ப்பக் [6]கவரிய
[7]ரூர்முற்றஞ் செற்ற தொருகூற்றஞ்—சேரர்

246. கனக்கு [8]மனீக ளந்தோறுங் கைக்கொண்
டினக்கு மாசுவா வெல்லாங்—தனக்குத்

247. துணிக்குநுங் கழைக்கரும்பு நெல்லுஞ் சுமக்கப்
பணிக்குங் கடவுட் பகடு—தணிப்பரிய

248. [9]பூகங்கைத் தாடோயச் செங்கை புயல்வானில்
மாகங்கை தோயப்போய் மாமேனி—நாகங்கைக்

249. கொண்டு தனிதங்கள் கோள்வேங்கை வீற்றிருப்பக்
கண்டு களிக்குங் களியானை—வண்டலம்ப

250. நின்று குதிக்கு மதத்தி னிலநெகிழ்த்தே
[10]கன்று மொளிப்பக் குளிப்பமுன்—சென்றெழுதிப்

251. பண்டு வெளியில் மகதத்தைப் பாவடியாற்
செண்டு வெளிகண்ட செங்கண்மாக்—கண்ட

252. மதிலே யகழாக வாங்கி யகழே
மதிலே யெழாநிற்க வைத்துப்—புதுமைசெய்

---

[1]மாந்தளிர். [2]இவ்வடிக்குப் பின் சிலகண்ணிகள் சிதைந்துபோயினவென்று தெரிகிறது. [3]பாறப். [4]மணிகொண்ட. [5]வறக்கப். [6]கவுரிய. [7]ரூர்முற்றுஞ். [8]மனீகங். [9]பூகங்கை தாடோய. [10]குன்று.

253. வாவிகள் செய்குன்ற மாகவச் செய்குன்றம்
வாவிக ளாக வெனவகுத்துத்—தாவுமான்

254. வெள்ளிடை [1]கோனக ராகவக் [2]கோனகர்
வெள்ளிடை யாக வெனவகுத்துத்—தெள்ளிப்

255. புரப்பா ரிரப்பாராய்ப் போக விரப்பார்
புரப்பாரே யாக்கும் புகழ்மாத்—திருக்குலத்துக்

256. கண்ட னயிரா பதமதங்கால் காலத்துக்
கொண்ட தொருசுவடு மேல்கொண்டு—வண்டு

257. கடியுங் களிறுங் [3]களிறுமே காதற்
பிடியும் பிடியாமே பின்னர்க்—கடிமதில்

258. மாற்று வருவன வங்காள பாகத்து
வேற்று...மாமிருக மதத்தைப்—போற்றார்

259. வயிரா கரமெறிந்த மானதன் கண்டன்
அயிரா பதமதமே யாகச்—செயிர்தீர்ந்த

260. [4]காதர் பிடித்தேறுத [5]தேருக் கடாக்களிறென்
றோதப் பெயரு மொருபொருப்புப்—பாதையிற்

261. கச்சியிற் காற்றளியிற் கல்லிற் கலிங்கத்திற்
கொச்சியில் வாதாவி யிற்குளத்தில்—விச்சியில்

262. வல்லூரிற் கொல்லா புரத்து மணலூரில்
நெல்லூரிற் புத்தூரில் நெட்டூரிற்—செல்லூரிற்

263. கோட்டாற்றிற் கொங்குல வக்கூரிற் கொப்பத்தில்
வாட்டாற்றிற் கம்பிலியின் மண்ணையில்—வேட்டுத்

264. தாரணி கவர்ந்து தமிழ்வேந்தர் பாடும்
பரணி புனைந்த பகடு—சரணென்று

265. வாடா மதுரையாழ் வாங்கி மடவரல்
பாடா விருந்த பருவத்து—நீடாப்

266. பரிசி லுடனே [6]பணிப்பதுபோர் யானை
குரிசி லுடன்வந்து கூடத்—தெருவில்

---

[1], [2]கோநக. [3]களிறுமே. [4]காதற். [5]தேருங். [6]பணிப்பறு, பணிப்பதுபோல்.

267. வரவந்தான் மன்னர் பிரானென்று மாரன்
பொரவந்தான் கைவாங்கிப் போனான்—[1]விரல்கவா

268. வீணைக் [2]ககப்பட்ட வேழ மிடற்றுக்கு
மாணைப் பெருமா [3]னகப்பட்ட—வாணுதல்

269. ஐந்து தருவு மமைந்த திருமாலை
தந்து தொழுவெழுந்து சாத்தினான்—மைந்தனும்

270. பண்ணுக்கே தோற்பான் பணைமுலைக்கு மல்குலுக்குங்
கண்ணுக்குந் தோலானே கைக்கொண்டான்—வண்ணமும்

271. வெண்டுகிலுங் காஞ்சியு மேகலையுந் தோள்வளையுங்
கொண்டவற்றின் மாறு கொடுப்பான்போற்—பண்டை

272. முடியுஞ்சிங் காதனமு முத்தக் குடையும்
படியு……… ………பணிப்பான்—பிடியுஞ்

273. சிவிகையு நிற்பவச் சேயிழை வீதி
கவிகையுந் தானுங் கடந்தான்—குவிமுலை

[அரிவை]

274. யேனை யரிவை யொருத்தி யிகல்மாரன்
சேனை திரண்டனைய செவ்வியாள்—வானில்

275. விடுசுடர்ச் செக்கர் வியாழமுந் தோற்கும்
படிசுடர்ப் பைம்பொற் படியாள்—வடிவு

276. நெடிதோற்கி லொக்கு நிறைமதிய நேரே
படிகோற்கு முத்தின் படியாள்—முடிவில்

277. குலபதும ராக மதிருதி கொள்ளும்
பலபதும ராகப் படியாள்—அலைகடலின்

278. முற்று [4]மகையாள் முகத்தா மரையாளப்
பொற்று மரையாளப் போதுவாள்—அற்றைநாள்

279. தண்ணென் கழுநீர்த் தடம்பொய்கை நாமெலாம்
அண்ணல் வருமளவு மாடுதுமென்—றெண்ணிப்

280. புணைக்கு மொருவன் புறங்காவ லாயத்
துணைக்குந் தடஞ்சுருகைத் தோயப்—பணைக்கும்

---

[1]விரலகவு. [2]ககப்பட. [3]னகப்பட. [4]முகையாள்.

281. புடைக்கும் விசும்பிடம் போதா முலைக்கு
நடைக்கு முதற்பகை நாமென் — றுடைப்புண்டு

282. பின்னைப் படுஞ்சக்ர வாகப் பெருங்குலமும்
அன்னக் குலமும் [1]அலம்வரப் — பின்னருங்

283. [2]கா...குங் கருங்கட்கு முட்கசே கைவருத்
[3]தே...குந் தாமோ மென்றுபோய்த் — [4]தோ...கின்ற

284. வாவியி லுள்ள வரால்களுஞ் சேல்களும்
தாவி விழுந்து தடுமாறத் — [5]தீவியம்

285. பொம்மென் சிலம்பு புலம்பு புறவடிக்கும்
அம்மென் கழுத்துக்கும் ஆற்றா து — மம்மர்பட்

286. டங்குந் திரியா [6]திரியாபோ யாமையுஞ்
சங்குந் தடத்தை விடத்தவழ — நங்கைதன்

287. செவ்வாயுங் காதுஞ் செயிர்த்துயின் சென்றொதுங்க
எவ்வாயுங் காணா தெதிரேநின் — றவ்வாய

288. கொள்ளைக் குமுத மலருங் குழையிள
வள்ளைக் கொடியு முடன்மயங்க — வெள்ளம்போற்

289. பெய்யு மதயானைக் கோடும் பெருநெடுங்
கையும் புடைப்பக் கலுழ்வதுபோற் — றெய்யல்சூழ்

290. தாம முலையாலுந் தோளாலுந் தாக்குண்டு
காமர் தடமுங் கரைகடப்பக் — கோமகன்

291. உள்ளம் பருகப் பெருக வுலாக்கொண்டு
கள்ளம் பெருகுங் கருநெடுங்கண் — வெள்ளம்

292. படிய வருசிவப்பு வள்ளம் பசுந்தேன்
வடிய வருசிவப்பின் வாய்ப்ப — நெடிது

293. திளைக்குந் திருமகளை வாவியிற் சேவித்
திளைக்குங் கொடியிடையா ரேத்தத் — திளைத்துழித்

294. தம்மைக் கமல மலர்க்கருளித் தாமவற்றின்
செம்மை கவர்ந்த திருக்கண்ணு — மெய்ம்மெய்யே

---

[1] அலமரப். [2] காற்கும். [3] தேற்குந். [4] தோற்கின்ற. [5] தீவிய. [6] திரியல்போ.

295. பொய்போய வைய மருங்குலு மேகலைபோய்க்
கைபோ யகன்ற கடிதடமும்—பைபோய்

296. வெறிக்கும் [1]பணிவளையம் வீங்கிய வேய்த்தோள்
எறிக்கும் பெரும்பே ரெழிலும்—நெறிப்படக்

297. கொண்டுபோந் தேறியக் கோமகன் போழகு
பண்டுபோய் நோக்கப் பயப்படுவார்—கண்டு

298. கலன்கலன் கண்ணைச்சிற் கென்று கடிதிற்
பொலன்கலன் கொண்டு பொதிந்தார்—இலங்கிழை

299. யானைப் பெருமா ளயிரா பதத்திருந்த
தானைப் பெருமானைச் சந்தித்தாள்—மேனி

300. பொருவிற்கே யெல்லா வரம்பையரும் போதாத்
திருவிற்கே குற்றேவல் செய்வாள்—பொருவிற்கை

301. வானிற்கோ [2]னஞ்சி [3]வதிவானை [4]யஞ்சாதே
[5]வேனிற்கோ னேபரவ மேற்செல்வான்—வானத்

302. [6]தெடுக்குங் கொடிமாத [7]ராசிற் றொடையிற்
றொடுக்கு மகரம்போற் றோன்று—தடுத்தெய்யு

303. மன்றன் மலரம்பு விற்கரும்பு வண்டுநாண்
தென்றல்தேர் தானனங்கன் செற்றதென—மென்றோளி

304. பாங்கி யெடுத்த படாகைப் பசும்பொற்பூ
வாங்கி யெதிர்தூய் வணங்கினாள்—தாங்கி

305. யெடுப்ப வெழுவாள் இருதிருத்தோள் மாலை
கொடுப்ப விறைவனுங் கொண்டான்—கொடுத்தவற்றுள்

306. பொன்மாலை போதகத்தைச் சூட்டிப் பொலன்குவளை
நன்மாலை சாத்தினா [8]ணாயகனுந்—தன்மார்பில்

307. ஆர்மாலை கோமா னருளினான் அம்மாலை
கார்மாலை யுட்கொண்டு கைக்கொண்டாள்—பார்மாலே

---

[1]பணிவலயம் வீக்கிய. [2]னஞ்ச. [3]வருவானை. [4]யஞ்சாத. [5]வேனிற்கோ னைப்பரவ மேற்செல்வாள். [6]தடுக்குங். [7]ரார்சிற்றிடையிற். [8]ணாயகனுந்.

308. மூதண்டங் காக்கு முது தண்டமாரவேள்
கோதண்டத் [1]தின்....கொள்ளாதோ—மாதண்ட

309. முற்றக் கடல்கிடந்து வேவ முனிந்தின்னங்
கொற்றத் தனிவிற் குனியாதோ—நற்றடத்தில்

310. ஏறு முதலை யெறிதிகிரி வேள்மகர
வேறு முறிய வெறியாதோ—ஆறுது

311. காந்து முழுமதியை யோரோர் கலையாக
வேந்து சுடர்வடிவாள் ஈராதோ—பாந்தள்மேல்

312. வைய முடையான் வலம்புரியில் வைகறைவா
யுய்ய வொருகுரல்வந் தூதாதோ—வையந்

313. தணியுந் தகைத்தோ தமியள்மா லென்று
பணியுங் கொடியிடையைப் பாரா—அணிய

314. உருத்தந்த தோற்றங்க ளொன்றினுந் தப்பா
[2]வருத்தா திருமனத்து வைத்தோ—திருத்தடந்

315. தோளுந் திருமார்பும் நீங்காத் துணைவியரில்
நாளும் பிரியாம லல்கினன்—மீள

[தெரிவை.]

316. [3]ஒருமகன் கண்ட வொருபெரும்பே ராகம்
திருமகள் போலத் திளைப்பாள்—இருநிலந்

317. தாளா லளந்து தருபெரியோன் றாங்கிய
தோளால் [4]வளர்ந்த துணைமுலையாள்—நாளுந்

318. திரையர மாதருஞ் சேவிப்பாள் [5]பெரு
வரையர மாதரில் வாய்ப்பாள்—கரையில்

319. விருப்பவணி கூர வருகின்ற மீளி
திருப்பவனி முன்விரைந்து செல்வா—ளுருப்ப

320. [6]வணர்ந்த பணிவலயத் தண்ணல் மூதனுள்
மணர்ந்த மணச்செவ்வி வாய்ப்பக்—கொணர்ந்தணிந்த

321. சூடா மணியும் பணிவளையுஞ் சூடகமுங்
கோடாழ் [7]மணிமகரக் குண்டலமும்—மாடிய

---

[1]தின்மீது. [2]வருத்தா. [3]ஒருமகள். [4]வளாந்த. [5]மேரு. [6]வனந்த. [7]மணிமகர குண்டலமு.

322. [1]சச்சைய மாலையு மாரமுந் தாமமுங்
கச்சையு மேகலையுங் காஞ்சியும்—பச்சென்ற

323. பட்டின் குறங்கணியும் பட்டிகையு நூபுரமுங்
கட்டுங் கனவயிரக் காறையும்—இட்ட

324. திலகமு மான்மதமுஞ் செஞ்சாந்து மெல்லா
வுலகமுந் தோற்கு முருவும்—கலகமு

325. மாரனுந் தானும் வருவாளை மன்னரில்
வீரனுங் காணா வெருவாப்—பாரனைத்துந்

326. தேருந் திருவைத் திருவவ தாரங்க
டோறும் பிரியாத் தொடர்பாளும்—வேறுகண்

327. வாளாலும் வார்புருவ வில்லாலு மாங்கமைந்த
தோளாலு மீளத் துவக்குண்டு—நீளிய

328. மைவிடா [2]னோக்கித் திருக்கை மலரணைக்
கைவிடா வார்வங் கடைப்பிடித்துத்—தெய்வப்

329. புயவளை விலையன போற்றுகின்ற தெல்லாம்
இயவன முழுது மியந்தான்—கவினிய

330. அற்புத மாலை யணியப் பணிசெய்யுங்
கற்பக [3]மென்று கடைக்கணித்தான்—பொற்பதி

331. பாதங்க ளாதி முடியளவும் பாரிப்ப
மாதங்க ராசிதிரு வாய்மலர்ந்தான்—ஓதி

332. முடிக்குந் தலைக்கோலம் போல்வன முத்தின்
படிக்குஞ் சலாபம் பணித்தான்—வடிப்புலகை

333. அச்சிறு பாணை மனைத்திற்குந் தன்வட
வச்சிறு காமே வழங்கினான்—பச்சை

334. மணிக்குந் தலையாய மாணிக்க ரத்னப்
பணிக்குந்தரி கூடம் பணித்தான்—தணிப்பில்

335. பெரும்பே ருவகையா ளாகிப் பெருமான்
விரும்பேர் புதுக்கண்ணி மீண்டாள்—பொரும்போர்

---

[1]சச்சையு, [2]நோக்கிதிருக்கை. [3]மொன்று,

336. வெருவளரும் பார்வேந்தர் வேந்தனைப் போற்றும்
பொருநரும் பாணரும் புக்கார்—தெரிவைக்குப்

337. பாடிக் குழலூதிப் பாம்பிற் படக்கூத்து
மாடிக் குடக்கூத்து மாடினாள்—பாடியில்

338. ஆனிரையு மாமா ளிகையும்போ லானுலகிற்
கோனிரையு மாலக் குழாங்கொண்டு—மீனிரை

339. மீது புடையு மடைய வனவே
யூதுந் திருப்பவள முட்கொண்டு—சீதத்

340. தடந்தூர வந்துங் ககன தலமு
மிடந்தூர வந்து மினிய—குடங்கள்

341. எழுவெழு மென்மே லெழுந்துங் குடங்கள்
விழுவிழு மென்மேல் விழுந்தும்—பழகிய

342. கோளீண்டுஞ் சோழேந்த்ர சிங்கந் திருத்தடந்
தோளீண்டு மென்றென்று சொல்லியும்—கோளொழிய

343. நின்வேய் [1]தபிரென்று நேரியன் மேருவிற்
பொன்வேய் குழலோன்பின் போக்கினாள்—பின்னர்

344. [2]கரும்பிற்கு மாறாகத் தங்கோமா னைவற்
பசும்பொற் றசும்பு பணித்தாள்—ஒசிந்துபோய்

345. நாடகப் பாம்பிற்கு நங்கற் பகங்கோத்த
வாடகப் பாம்பொன் றருளினாள்—பாடுநர்மேல்

346. வற்றாத மான்மத வாவியில் வாடாத
பொற்றா மரையைப் புனைகென்றாள்—கொற்றவன்

347. கொந்தார மாலை கொளவிளைத்த மாலைக்கு
மந்தார மாலை வருகென்றாள்—நந்தாத

348. பேறுந் திருவருளு மெய்தி யவர்பெயரா
வேறுந் தவிசு தரவேற்று............

349. துகிலசைந்து நாணுந் தொலைய வளக
முகிலசைந்து சோர்விடைக்கு முற்ற—வகிலமுந்

---

[1] தவிரென்று, [2] தசும்பிற்கு.

350. சேனையு மன்னருந் தெய்வப் [1]பெருமாளும்
யானையு நிற்க வெதிர்நின்று—கோனே

351. சதயுக மென்னுந் தரணிபர் மக்கள்
பதயுக மல்லது பாரார்—உதயாதி

352. காந்தின கைத்தலத்தைப் பார்மடந்தை கற்பகாத்
தேந்து மவரவா சென்றிகழ்வர்—பூந்தொடி

353. நற்போர் மடந்தை திருத்தோளை நாமுடைய
வெற்போ ரிரண்டென்று வீற்றிருக்குங் — கற்பிற்

354. கலந்தாளுஞ் சொற்கிளத்தி கன்னதுவய மேனப்
பொலந்தா மணியென்று போகாள்—நிலந்தரா

355. அந்தா மரையுங் கடைக்கண்ணை யென்னிரண்டு
செந்தா மரையென்று செம்மாக்கு—முந்துற

356. மல்லா புரேச சிலகால மற்றிவை
யெல்லாந் தணித்துடையோம் யாமென்றே—யல்லாது

357. மேகோ தகமிரந்த சாதகம் வெற்பையே
யேகோ தகம்பொழிந்தா லென்செய்யும்—மீகத்தின்

358. தாலை வெயில்வேண்டு தாமரைக்குக் கற்பாந்த
வேலை வெயிலெறிக்க வேண்டுமே—மாலைச்

359. சிலாவட்டஞ் சிற்சில சென்றுருக வென்று
நிலாவட்ட நின்றெறிக்க நேரே—குலாவிளைஞர்

360. சேற்றுக்கால் மீளுந் திருநாடா நீதருமால்
ஆற்றுக்கால் மேன்மே லளிப்பரே—கோற்றொடியார்

361. நீங்கரிய மேகமே யெம்போல்வள் நீயளித்தாற்
றூங்கரிய........ ....

[பேரிளம்பெண்]

362. ....வேறொருத்தி
...............வெறுமதவிதந்தா னெறிஞள்—

363. கச்சை முலையுங் கடிதடமுங் குங்குமச்
சச்சை கமழுந் தடந்தோளும்—நிச்சியமும்

---

[1]பெருமானும்.

364. வந்த வுளதென் றிருந்த மலர்நின்றும்
போந்த திருமகள் போலிருப்பாள்—வேந்தர்

365. பணியுந் தடமகுடம் பன்னூறு கோடி
யணியுந் திருத்தா ளபயன்—பணிவலய

366. வீக்கிலே வீங்கியதோள் மேரு கிரிசிகரத்
தாக்கிலே சாய்ந்த தனதடத்தாள்—பூக்கமழ்

367. ஆரேற்ற பொற்றூ ளருளொளியை யாயிரம்
பேரேற்ற தெய்வப் பெருமானைக்—காரேற்

368. றடல்போ லடுதிகிரி யண்ணலைத் தன்பாற்
கடல்போ லகப்படுத்துங் கண்ணாள்—மடல்விரி

369. தெங்கினும் ஏற்குந் தசும்பினுந் தேர்த்தெழுப்
பொங்கு நுரையினும்போய்ப் போகாது—தங்கு

370. நறவு குவளை நறுமலர்தொத் தூண்ணு
மிறவு கடைக்கணியத் தேய்ப்பச்—சுறவுக்

371. கொடியோனை நோக்குவாள் கண்டாள்போற் கொங்கை
நெடியோனை நேமிப் பிரானைப்—படியோனைக்

372. கண்டனை மேதினியாள் காந்தனை வந்துய்யக்
கொண்டனை யென்று குறுகுவாள்—கண்ட

373. மலர்கண் ணிமைப்புச் சிவப்பூர மாற்றித்
திலகங் குறுவியராற் றேம்பப்—பலகுதலை

374. மாற்றந் தடுமாற்ற மெய்த மனத்துள்ள
தேற்றமித் தோற்றஞ் சிதைவிப்ப—ஏற்கைமிகு

375. தன்மை யறிய நிலவினேன் சந்தனத்தே
முன்னை யறிய வுணர்வினேன்—வெண்வையிற்

376. செல்லாத கங்குலெனத் தீராத வாதரவேம்
பொல்லாத வெம்பசலைப் போர்வையோம்—நில்லாத

377. வாமே கலையே முலைவிக்கா விம்பினேம்
யாமேயோ விப்போ தெளிவந்தேம்—யாமுடைய

378. நன்மை யொருகாலத் துள்ள தொருகாலத்
தின்மை யுணராயோ வெங்கோவே—மன்னனு

379. முன்பு கருடன் முழுக்கழுத்தி லேறுவது
பின்பு களிற்றின் பிடர்க்கழுத்தே—மின்போல்

380. இமைக்குங் கடவு ளுடையினைபண் டிப்போ
தமைக்குந் துகிலினை யன்றே—சமைத்ததோர்

381. பாற்கடலிற் சீபாஞ்ச சன்னியம்பண் டிப்போது
காற்கடி சென்று கவர்சங்கே—சீர்க்கின்ற

382. தண்ணந் துழாய்பண்டு சாத்தத் திருத்தாமக்
கண்ணியின் றாரின் கவட்டிலையே—வெண்ணிய

383. தெள்ளி யறைபாற் கடலே [1]திருத்துயில்
பள்ளி யறையின்று பாசறையே—வெள்ளிய

384. முத்தக் குடைகவித்து முன்கவித்த மாணிக்கக்
கொத்துத் தொடையொக்கக் கூட்டுமே—யித்திறத்தால்

385. எண்ணிற் கரிய பெரியோனீ யெங்களையு
மண்ணிற் றிகழ வடுக்குமே—விண்ணப்பங்

386. கொண்டருளு கென்ன முகிழ்த்த குறுமுறுவற்
றண்டாளக் கொற்றத் தனிக்குடையோன்—பண்டறியா

387. வாரமு மாலையு நூலு மருங்குலாற்
பாரமு மேகலையும் பல்வளையு—மூரும்

388. பிடியுஞ் சிவிகையுஞ் சேரும் பிறவும்
படியுங் கடாரம் பலவும்—நெடியோன்

[1] திருத்துயில்கொள்.

389. கொடுத்தன கொள்ளாள் [1]கொடாதனை கொண்டாள்
அடுத்தன தோண்மே லயர்ந்தாள்—எடுத்துரைத்த

390. பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
மாத ரினங்கொள்ளா மால்கொள்ளச்—சோதி

391. இலகுடையான் கொற்றக் குடைநிழற்ற வீரேழ்
உலகுடையான் போந்தா னுலா.

அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந்—தென்றிசையில்
நீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோத யா.

இராஜராஜதேவருலா முற்றும்.

குறிப்பு:—இந்நூலை யுதவிய ஸ்ரீமான் A. S. இராமநாத ஐயரவர்கள் சென்னையி லிருக்கும் தமது நண்பரொருவரது கையெழுத்துப் பிரதியை நோக்கித் தாம் பிரதி செய்துகொண்டதாக அன்புடன் தெரிவித்தார்கள்.

அநுபந்தம்.

ஒட்டக்கூத்தர் பாடியதாகக்கூறும் சோழ அரசர்கள் மூவர். அவர்களது பெயரும் அரசுபுரிந்த காலமும் வருமாறு:—

1. பரகேசரி - விக்ரமசோழன். A. D 1118–1135
2. ராஜகேசரி - குலோத்துங்கசோழன் II A D. 1133–1148
3. பரகேசரி - ராஜராஜன் II A. D. 1146–1162

இங்கே மூன்றாவதாகக் காணப்படும் ராஜராஜசோழனே இவ்வுலாவிற்குப் பாட்டுடைத்தலைவன். இவனைப்பற்றிய மெய்க்கீர்த்தியொன்று தென்னிந்திய சிலாசாஸனத்தொகுதியிற் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. (S. I. I. Vol. III. p. 79). விசேஷமான சரித்திரச்செய்திகள் இதன்கண் கூறப்படவில்லையெனினும் இயைபுபற்றி இங்கே தரப்படுகின்றது.

---

[1]கொடாதன.

'பூமருவிய திருமாதும் புயமாதும் ஐயமாதும்
நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க
அருமறை விதியனைத்து மருந்தமிழுந் தனிதழைப்ப
வருமுறை யுரிமையின் மணிமுடி சூடித்
திங்கள் வெண்குடை திசைக்களி றெட்டுந்
தங்கு தனிக்கூடந் தானென விளங்கக்
கருங்கலிப் பட்டியைச் செங்கோல் துரப்பப்
*பொருங்கதி ராழி புவிவளர்த் துடன்வர
†வில்லவ ரிரட்டர் மீனவர் சிங்களர்
பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய
எண்ணருங் கற்பில் மண்ணகம் புணர்ந்து
செம்பொன்வீரசிங்காதனத்து
உலகுடைமுக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந் தருளிய
கோப்பரகேசரிவன்மரான
திரிபுவனசக்கரவர்த்திகள்
ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு.......'

இதனைத்தவிர, 'பூமருவிய பொழிலேழும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியொன்று No. 28 of 1908) இவ்வரசனைக்குறித்து உளதாக அறியப்படுகின்றது (A. R. for 1908 p. 67). மேலும், இவ்வரசனுக்கு, 'புயல்வாய்த்து வளம் பெருக' என்னும் மெய்க்கீர்த்தியொன்றும் கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றது. (p. 98 of A. R. for 1909).

S. வையாபுரிப்பிள்ளை.

---

* பொருவலி - எ - ம். † வில்லவர் தெலுங்கர் மீனவர் சிங்கணர்.

புண்ணியம்.

அது பசுபுண்ணியம், பதிபுண்ணிய மென விருவகைப்படும்.

பசுபுண்ணியம் முப்பத்திரண்டாம். அவை ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குணவு, பசுவிற்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுதல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்பனவாம்.

இவை அம்பிகைசெய்த அறங்களெனப் பிங்கலநிகண்டு சூடாமணி நிகண்டுகளிற் கூறினார்.

காஞ்சிப்புராணமிரண்டாங்காண்டத்தில் †ஓதுவார்க்குணவு, சிறைச்சோறு, அறவைச்சோறு, சுண்ணம், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பிறர்துயர்காத்தல், ஏறுவிடுதல் இப்பத்தையுநீக்கி, வேதாகமந் தமிழ்களைப் பயிற்றல், அரசர்க்குணவுமுதலியனவளித்தல், புராணங்களைப் பள்ளிகளிற் கற்பித்தல், சைவதீக்கைசெய்வித்தல், கடன்களைத்தீர்த்தல், நித்திரைக்குச் சயனமுதலியனவளித்தல், சிறார்க் கன்னமளித்தல், இரப்போர்க்கன்னமளித்தல், தீர்த்தயாத்திரைமுதலியசெய்வோர்க் கன்னசாலை, கேடுற்றவறங்களைப் புதுக்கிக்காத்தல் இப்பத்தையுங் கூட்டி முப்பத்திரண்டாகக்கூறினார்.

இவற்றுள் நிகண்டிற்கூறிய ஓதுவார்க்குணவு என்பதை வேதாகமந் தமிழ்களைக் கற்பித்தல் என்பதனுள்ளும், அறவைச்சோறு என்பதனை இரப்போர்க் கன்னமளித்தல் என்பதனுள்ளும், கண்மருந்து என்பதனை நோய்மருந்து என்பதனுள்ளும், பிறர்துயர்காத்தல் என்பதனைக் கடன்களைத் தீர்த்தல் என்பதனுள்ளும் அடக்கியும்; சிறைச்சோறு, சுண்ணம், கண்ணாடி, காதோலை, தலைக்கெண்ணெய், ஏறுவிடுதல் என்னு மிவ்வாறும் பெரும்பயனில்லையெனக் கருதி நீக்கி, அரசர்க்குணவு முதலியனவளித்தல், புராணங்களைப் பள்ளிகளிற் கற்பித்தல், சைவ தீக்கைசெய்வித்தல், நித்திரைக்குச் சயனமுதலியன வளித்தல், சிறார்க் கன்னமளித்தல், தீர்த்தயாத்திரைமுதலியனசெய்வோர்க் கன்னசாலை என்னு மாறினையுங் கூட்டியுங் கூறினார்போலும்.

---

†௨௱௮-ங் கவிமுதல் ௨௬௯-ஆவதுகவிவரை காண்க.

அக்காஞ்சிப்புராணம் முதற்காண்டந் தழுவக்குழைந்த படலத்தில், ௧௩௮-ங் கவிமுதல், ௧௪௧-ங் கவிவரை இவற்றுட் சிலவற்றை நீக்கிச் சிலவற்றைக் கூட்டிக் கூறினார்; ஆண்டுக் காண்க.

நிகண்டுகளிற் கூறிய வறம் முப்பத்திரண்டில், ஆதுலர்சாலை—வறியவர்க் கன்னசாலை. சிறைச்சோறு—சிறைச்சாலையி லகப்பட்டிருப்பவர்க் குதவு மன்னம். ஐயம்—தவவேடஞானியர்க்குதவும் பிச்சை. அறவைச்சோறு—அநாதர்க்குதவு மன்னம். அறவைப்பிணஞ்சுடுதல்—அநாதப்பிரேதத்திற் கீமக்கடன்செய்தல். அறவைத்தூரியம்—அநாதர்க் குதவு மாடை. ஏறுவிடுதல்—ஒருபெண்ணை மணமுடிக்கவருபவன் பிடிக்கும்பொருட்டு இடபம்விடுதல். அதாவது பெண்ணைப்பெற்றோர்தந் தொழுவிலேபிறந்தஏற்றிளங்கன்றுகளைத் தம்முட்டியாகவிட்டு வளர்த்து அவ்வேற்றைப் பிடித்தவனுக்குத் தம்பெண்ணைக் கொடுப்பதாகப் பறையறைந்து விடுதலென்பர்; இது ஒருதிணைக்குரியமராபாதலால் இதனைநீக்கி, நகரங்களிலேயுள்ள மந்தைகளிற் பசுக்கள் கருப்பமுற்று நற்கன்றுகளை யீனும்பொருட்டுப் பொலியெருதுவிடுதலென்பதே பொருளாகக்கொள்க.

இனிப் பதிபுண்ணியம் பத்துவகைப்படும். சரியை கிரியை யோகம் ஞானம் என்பவெல்லாஞ் சிவபுண்ணியமாயினும் ஞானத்து ளடங்கிய சிவபுண்ணியம் பத்துமே சிறப்பாம். அவை தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம். இவை சிவஞானியர்களாகிய அடியவர்கள்செய்யுஞ் செய்கைகளாம்.

தணிகைப்புராணம் நந்தியுபதேசப்படலத்தில் இவற்றை யுண்மைஞானமென்றுங் கூறுவர்; இவை குருமுகமாகத் தெரிந்துகொள்ளத் தக்கன. ஈண்டு வரைதற் கியலாவென்க. சிவதருமோத்தரஞ் சிவதருமவியலிற் கொல்லாமை பொறை மெய்ம்மொழி முதலிய பத்துவகைத் தருமங் கூறுவர். அவை சிவபுண்ணியஞ்செய்வார்க் கங்கமென்பர். இவைகளையின்றிச் செய்யுஞ் சிவபுண்ணியம் பயன்படாவென்று சிவாலயதெரிசனவிதியிற் கூறுமாறு காண்க.

இச்சிவபுண்ணியம் பத்துஞ் சிவனடியார்செய்கை யென்பதனைத் திருநாவுக்கரசுநாயனாருளிய தேவாரத்தில்,

“பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுந்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே.”

எனக் கூறியவாறு காண்க.

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகருமாகிய
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.